கம்பன் மணி மலர்

கம்பன் கழகம் • காரைக்குடி


பொன் விழா
நிறைவு மலர்

விபவ
1989



51

TRUE CELEBRATION LIES IN SPREADING JOY TO OTHERS...



TUBE INVESTMENTS OF INDIA LIMITED

HTA 7118

கம்பன் மணி மலர்

பொன் விழா நிறைவு மலர்

1989

266

(3)

விபவ பங்குனி 7 உ முதல் 10 உ வரை

1989 மார்ச் 20 முதல் மார்ச் 23 வரை நிகழ்ந்த

51ஆவது கம்பன் திருநாள் வெளியீடு

கம்பன் கழகம்

கம்பன் மணி மண்டபம், காரைக்குடி-623002

உள்ளுறை

முன்னுரை

இராமாயணம் இன்று இந்தியா முழுவதும் அல்லாமல், உலகம் முழுவதும் பரவ ஆரம்பித்து விட்டது. வால்மீகி வடமொழியில் எழுதிய இராமகாதை நம் நாட்டில் சமஸ்கிருதம் படித்துப் புலமை பெற்றவரிடம் மட்டுமே உலவி வந்தது. அப்புலவர்கள் ஊர் ஊராகச் சென்று பிற மொழிகளிலே பிராந்தியத்திற்கேற்ப மக்களுக்கு எடுத்துரைத்தார்கள். இராமனை ஒரு அவதாரமாகக் கொண்டு ராமகதையை மதபோதனைக்குரியதாகவே கொண்டிருந்தனர். பாமரர்களிடையே கதை மட்டுமே புரிந்திருந்தது. அவர்கள் இராமன் மீது பக்தியும் செலுத்தி வந்தனர்.

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு தமிழ்ப் புலவர்கள் வசன நடையில் கதைகளாக எழுதினார்கள், ஆனால் கம்பன் கவித்துவத்தில் சிறந்தவனாதலால், தனது முழுத்திறமையையும் புலமையையும் காட்டுவதற்கு, மக்களிடையே முன்பே அறிமுகமாகியிருந்த இராமாயணத்தை வான்மீகியின் வழியில் நின்று பக்தியில் சிறந்ததும், சமுதாயத்திற்கு முழுவதும் இன்றியமையாத தேவையானதுமான காவியமாக ஆக்கி வைத்தான்.

கம்பன் வாழ்ந்த காலத்தை நாம் சிந்திக்க வேண்டும். கி.பி. நான்காம் ஐந்தாம் நூற்றாண்டிலேயே முத்தமிழ் வேந்தர்கள் நிலைகுலைந்தனர். களப்பிரரும், பல்லவருமே தமிழகத்தை ஆண்டனர். ஆறாம் நூற்றாண்டின் இறுதியில் சங்கம் சார்ந்த சிற்றரசர்களும் மறைந்தனர். ஏழாம் நூற்றாண்டின் பாண்டிய நாடு களப்பிரர் ஆட்சியிலிருந்து பாண்டியர் ஆட்சிக்கு மீண்டும் வந்தது. ஆனால் சோழநாடு முழுவதும் களப்பிரரிடமிருந்து பல்லவரது பிடியில் சிக்கியிருந்தது. அதன் பின்பும் எட்டு ஒன்பதாம் நூற்றாண்டுகளில் பல்லவர் ஆட்சி ஓங்கியிருக்க ஒன்பதாம் நூற்றாண்டில் இறுதியில் பல்லவர் வலிகுன்றச் சோழர் ஆட்சி மேலோங்கியது. அதன் பொற்காலம் பத்து, பதினொன்று, பன்னிரெண்டாம் நூற்றாண்டுகளில் மேலோங்கி நின்றது· இதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே சங்க காலத்தின் சிறந்த நூல்களும் அழிந்த நிலையினை அடைந்தன. பின்பு முத்தரையராட்சியில் தமிழ்ப் பண்பாடு நாகரீகம் அனைத்தும் அழிந்தன. அவர்களும் மறைந்தனர். இத்தருணத்தில் சோழர் மீண்டும் ஆட்சியை நிறுவினர். இந்தக் குழப்பமான நூற்றாண்டுகளில் தமிழகத்தில் என்ன ந- ந்தது என்று தெரிந்து கொள்ள முடியாத இருண்ட காலமாக இருந்தது.

நல்லாட்சி அமைந்த காலங்களில், மன்னர்களைப் பற்றியும், வீரர்களைப் பற்றியும், அவர்களின் வெற்றிகளைப் பற்றியும் பாடுவதும், புகழ்வதும் மிகவும் தேவையாக இருந்தது. இச்செய்திகளை எழுதிப் போற்றப் புலவர்கள் முனைந்தார்கள். அவர்களை மன்னர்களும் ஆதரித்து ஊக்குவித்தனர். புலமையும், திறமையும் வாய்ந்தவர்கள் சரித்திரத்தில் இடம்

பெற்றார்கள். கம்பன் காலத்திலேயே ஒட்டக்கூத்தருக்கும் கம்பனுக்கும் இடையே ஏற்பட்ட போட்டிகளையும், ஏற்றத்தாழ்வுகளையும் அறிவோம். மன்னர்களிடையேயும் உயர்ந்த புலவர்களைத் தன் அரசவையில் அமைத்துக் கொள்வதில் போட்டி ஏற்பட்டிருந்தது. இக்கருத்தைப் புலப்படுத்துவதுதான் கம்பன் கூற்றாக வரும். ''குரங்கேற்றுக் கொள்ளாத கொம்பு உண்டோ?' எனும் வரிகள். இதைச் சொல்லித் தானே கம்பன் சோழப் பேரரசை விட்டு வெளியேறினான்.

கம்பன் வான்மீகியைப் பின்பற்றி ராமகாதையை எழுதினாலும் அவன், இராமாயணம் காவிரி நாட்டில் நடந்ததைப் போலவே கற்பனை செய்து கொண்டு, தான் கற்ற கலைகள் அனைத்தையும் கையாண்டு காவியத்தைத் திறம்பட எழுதியிருக்கின்றான். இவனது கவிதை நயத்தை அண்மையில் நம்மிடையே இருந்த ''ரசிகமணி'' டி.கே.சி. தான் எழுத்துக்கெழுத்து நன்றாக அனுபவித்தவர் என்பது மிகையன்று. அவரே சொல்லியிருப்பது; ''டென்னிஸ் பந்து விளையாடும் போது எப்படி ஆட்டக்காரர்களை உன்னிப்பாகக் கவனித்து அவர்கள் அடிக்கும ஒவ்வொரு அடியையும் மாற்றி மாற்றிப் பார்க்கிறோமோ, அதேபோல இராமகாதையில் வரும் பாத்திரங்கள் ஒவ்வொருவரும் எப்படி விளங்குகின்றார்கள் என்பதைப் படித்துப் பார்த்து அனுபவிக்க வேண்டும்.'' இந்த முறையில் இராமகாதை எனும் அமுதத்தைத் தமிழ் அறிந்த தமிழர்களால்தான் முழுமையாக அனுபவிக்க முடியும் என்றார். இந்த நிலையில்தான் கம்பனை நாம் அனுபவிக்கின்றோம். மற்ற மொழியினருக்கு உண்மையான கம்பனின் உணர்வு புலப்படுவது அரிதேயாகும்.

அண்மையில் தொலைக்காட்சியில் காட்டப்பட்ட ராமாயணக் கதையில் பல ராமாயணங்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களில் கம்பனது கதைப்போக்கும் தழுவப்பட்டது இதன் மூலம் தமிழகத்தில் மட்டுமே, அதுவும் தமிழர்களால் மட்டுமே நன்கு அனுபவிக்கப்பட்ட ராமாயணக் கதையில் கம்பனின் சிறப்பினை அனைத்திந்திய மக்களும் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இனிமேல் தான் பிறமொழி பேசும் பாரத மக்கள் கம்பனின் பெருமையை அறிவதற்குரிய தொடக்கமே ஏற்பட்டுள்ளது எனலாம். எனவே பாரத நாட்டில் பயின்று வரும் பல மொழி ராமாயணங்களில் கம்பனின் உயர்வு வெளிப்படச் செய்ய வேண்டுவது நமது கடமையாகும். இதனைச் செய்து விட்டால் கம்பன் தமிழ்ப் புலவர்களிடையே மட்டும் கவிச்சக்கரவர்த்தியாகச் சிறப்படைந்திருப்பதோடு இந்திய நாட்டின் மற்ற மொழிப் புலவர்களிடையேயும் கவிச்சக்கரவர்த்தியாவான் என்பதை நிலைநாட்டினவராக ஆவோம்.

கடந்த ஆண்டு தமிழக அரசின் நிதி உதவியைக் கொண்டு மணி மண்டபத்தின் வேலையும் தமிழ்த் தாய் கோவிலின் வேலையும் நடந்து வருகிறது. தமிழக அரசும் (தேர்தலுக்கு பிற்பாடும் அரசாங்கம்) இப்பணியை முடிப்பதில் அக்கறையாக உள்ளது. எனவே கால தாமதமாகப் பூர்த்தி செய்யாமல் தடைபட்ட வேலைகளும் நல்ல முறையில் முடியும் என எதிர்பார்க்கிறோம்.

ஜி.கே. சுந்தரம்
தலைவர்

கம்பன் புகழ்
கன்னித் தமிழ்

''கம்பன் புகழ் பாடிக் கன்னித் தமிழ் வளர்ப்போம்''

அன்புடையீர்

வெகுதானிய ஆண்டு பங்குனித் திங்கள் உ௰, உ௰௧ (ஏப்ரல் 2, 3) தேதி ஞாயிறு, திங்கட் கிழமைகளில் கம்பர் விழா காரைக்குடியில் சிவன் கோவில் வடக்கு வீதியில் இதற்கென அமைக்கப்பட்டிருக்கும் அலங்காரக் கொட்டகையில் நடைபெறும்.

திருநெல்வேலி, திருவாளர்
டி.கே. சிதம்பரநாத முதலியார் பி.ஏ., பி.எல்.
அவர்கள் தலைமை வகிக்க அன்புடன்
இசைந்துள்ளார்கள்.

அன்பர்கள் பலர் சொற்பொழிவாற்றுவார்கள்.

எல்லாருடைய வருகையும்

எதிர்பார்க்கப்படுகின்றது.

கம்பர் விழாக் கமிட்டி — சொ. முருகப்பா, தலைவர்

காரைக்குடி — சா. கணேசன், காரியதரிசி

இன்றைக்குச் சரியாக ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இப்பூவுலகில், தமிழ்நாட்டில் காரைக்குடியில் முதன்முதலில் கவிச் சக்கரவர்த்தி கம்பன் திருநாள் இப்படியாகத் தான் தொடங்கப் பெற்றது. கம்பன் பாடல்களைப் பாடிப் பாடி உள்ளங்களை உருக்கி உணர்வூட்டிய ரசிகமணி டி.கே.சியும், கம்பன் பாடல்களைச் சுண்டிச் சுண்டிப் பார்த்து தரங் கண்டு முதற்பதிப்புக் கண்ட சொ.முரு.வும், கம்பன் புகழ் பாடியும், பருகியும் கன்னித் தமிழ் வளர்த்த கம்பன் அடிப்பொடியும் அவர்கள் அன்று அப்படி வித்தூன்றிய கம்பன் திருநாள் இன்று பொன்விழா நிறைவுறக் கண்டு தங்களை பொய்படாக் கம்பன் காதல் ததும்பி மேற்பொங்க அகம் நெகிழ்ந்துருகுவர்; ஆனந்தக்கண்ணீர் சொரிகுவர்.

கம்பன் அடிப்பொடி அவர்கள் கனவு கண்ட தமிழ்த்தாய் கோயில் வேலைகள் இடையே தடைப்பட்டு, இப்போது மீண்டும் முழுமூச்சாய்ப் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. ஒரு மாமாங்க காலம் தவமிருந்த தமிழ்த்தாய் இப்போது அரியாசனம் ஏறி அருளாட்சி புரிய உள்ளாள்.

ஆனால் ஒன்றரை மாமாங்க காலம் முன்னரே ''கருக்''கொண்ட கம்பன் மணி மண்டபப் பணி இன்றும் முற்றுப் பெறாமலேயே நிற்கிறது. இதற்கு எந்தப் பரம தயாநிதி படியளக்கப் போகிறாரோ, இன்னும் தெரியவில்லை.

எந்தைபிரான் கம்பன் ஓர் உலக மகாகவி என்பதும், கவிச்சக்கரவர்த்தி என்பதும் சத்திய வாக்கானால், ஒரு மாமாங்கம் கழித்துத் திறந்த தமிழ்த்தாய்கண் போல, கம்பன் மணி மண்டபமும் மங்கல நீராட்டுப் பெறட்டும்; கம்பனுக்காகவும் கன்னித் தமிழுக்காகவும் தன்னையே அர்ப்பணித்துக் கொண்ட அப் புனித் ஆத்மாவின் ஆசை நிறைவேறட்டும்.

கம்பன் கழகம்
கம்பன் மணி மண்டபம்
காரைக்குடி.
20-3-'89

அதுவரையில்

''நின்னை வணங்கி, நீ வகுத்த நெறியில்
நிற்கும் அது அல்லால்
என்னை அடியேம் செயற்பாலர்?''

என்று கம்பன் புகழ் பாடிடுவோம்; கன்னித் தமிழ் வளர்த்திடுவோம்;

உங்கள் அன்பும் பணிவுமுள்ள

மு.மெ. முத்துராமன்
கம்பன் அடிசூடி
செயலாளர்

கம்பன் கழக உறுப்பினர்கள்

தலைவர் :
திரு. ஜி.கே. சுந்தரம்

உபதலைவர் :
திரு. க.கு. கோதண்டராமன்

செயலாளர் :
திரு. மு.மெ. முத்துராமன், கம்பன் அடிகுடி

உதவிச் செயலாளர் :
திரு. ச. கம்பராமன்

பொருளாளர் :
திரு. அ. திருநாவுக்கரசு

உறுப்பினர்கள் :

திருவாளர்கள்

1. மெ.செ.மெ.மெ. சொக்கலிங்கம் செட்டியார், காரைக்குடி
2. ச.நா.அ.சொ.அ. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி
3. என்.ஏ. மாரிமுத்து பிள்ளை, காரைக்குடி
4. ராம. கண்ணப்பன், நாட்டரசன்கோட்டை
5. மு. சிதம்பரம், காரைக்குடி
6. எம்.எஸ். சுந்தரம் பிள்ளை, பாளையங்கோட்டை
7. ந. கோவிந்தசாமி, புதுவை
8. வெ. அருணாசலம், மலாக்கா
9. வி.என். சிதம்பரம், ராங்கியம்
10. ஆர்.கே. சுப்பிரமணியன், காரைக்குடி
11. பெ.மு. சுப்பையா செட்டியார், ஆத்தங்குடி
12. பழ. சண்முகம், காரைக்குடி
13. நா. மெய்யப்பன், காரைக்குடி
14. அரு. நாகப்பன், ஒ. சிறுவயல்
15. அள. சுப்பையா, காரைக்குடி
16. அள. வீரப்பன், காரைக்குடி
17. ராம. தெ. முருகப்பன், காரைக்குடி
18. ப.மு.சித. பழநியப்பன், காரைக்குடி
19. எஸ். ஏகப்பன், நாட்டரசன் கோட்டை
20. ராம. சொக்கலிங்கம், காரைக்குடி
21. ப.சு.ராம. அண்ணாமலை செட்டியார், காரைக்குடி
22. சுப.சித. சுப்பிரமணியன், காரைக்குடி
23. ஆ.ம. ஸ்ரீதரன், இரகுநாதபுரம்
24. சா.நா. நாராயணன், காரைக்குடி
25. பழ. முத்தையா, காரைக்குடி
26. வெ. பழநியப்பன், காரைக்குடி
27. எஸ். முனுசாமி, காரைக்குடி
28. அரு. லெட்சுமணன், காரைக்குடி
29. நா. பழநியப்பன், காரைக்குடி
30. லெ. கணேசன், காரைக்குடி
31. மெ. காந்தி, காரைக்குடி
32. சரசுவதி, இராமநாதன், பள்ளத்தூர்
33. வை. கண்ணுச்சாமி, தஞ்சை
34. சித. ஆதப்பன், வட்டூர்
35. பி. மூக்கையா ஆசாரி, காரைக்குடி

மலர்க் குழு

தலைவர் :

டாக்டர் எம்.ஏ. எம். இராமசாமி

செயலாளர் :

திரு மு.மெ. முத்துராமன், கம்பன் அடிகுடி

பொருளாளர் :

திரு அ. திருநாவுக்கரசு

துணைச் செயலாளர் :

திரு ச. கம்பராமன்

உறுப்பினர்கள் :

பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்	திரு ச. மெய்யப்பன்
திரு எம்.எஸ். சுந்தரம்பிள்ளை	திரு என். கோவிந்தசாமி
திரு ஏவி-எம். சரவணன்	திரு ராம. அருணாசலம்
திரு கே.எல். இராமநாதன்	திரு எல், சபாரத்தினம்
திரு வானதி திருநாவுக்கரசு	திரு ஏ.ஆர் இராமசாமி
திரு ஆர்.எம். ரெங்கநாதன் செட்டியார்	திரு நா. மெய்யப்பன்

''முன்னமருட் கம்பனெனும் நாமம் கேட்டான்
    மூர்த்தியவன் இராமகாதை முழுதும் கேட்டான்

பின்னருள்ள சான்றோர்கள் பேசக் கேட்டான்
    பேர்த்துமவன் சேவடிக்கே பிச்சன் ஆனான்

அன்னையுடன் அத்தனுமே கம்ப னென்றான்
    அவன்பெயராய்த் தன்பெயரை ஆக்கிக் கொண்டான்

தன்னைமறந் திட்டான்தன் நாமம் கெட்டான்
    தலைப்பட்டான் சேர்ந்திட்டான் தலைவன் தாளே.''

— கவிஞர் சொ. சொ. மீ. சுந்தரம்

" நின்னை வணங்கி, நீவகுத்த நெறியில் நிற்கும் இதுஅல்லால் என்னை அடியோம் செயற்பால?"



" நின்னாவார் பிறரன்றி நீயே ஆனாய்;
நினைப்பார்கள் மனத்துக்கோர் வித்து மானாய் "

பாலகாண்டத்தில் இராமன்

டாக்டர் தா. வே. வீராசாமி, எம்.ஏ., பிஎச்.டி.,
பேராசிரியர் & தலைவர்
தொகுப்பியல்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்-5.

கம்பராமாயணப் பாயிரத்தில் அவையடக்கமாக இராமன் கதையை 'ஆசை பற்றி அறைபலுற்றேன்' (பாயிரம் 4)* என்று கூறும் கம்பர் கூற்றில் 'இராமன்' என்ற பெயரை முதன் முதலில் கேட்கும் வாய்ப்புக் கிடைக்கிறது. பாயிரத்தின் இறுதியில் இராமன் 'நடையில் நின்றுயர் நாயகன்' எனக் கூறும் போது ஒழுக்கநெறி நின்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து உயர்நிலை பெற்ற தலைவன் என உணர்வு எழுகிறது. இத்தலைமையின் உருவாக்கத்திற்குப் பாலகாண்டத்தில் காணப்பெறும் இராமனின் பண்பு வளனும், செயல் நலனும் எங்ஙனம் துணை புரிகின்றன என்பது இராமாயண முதற் காண்டத்தைத் தொடங்கும் போது கேள்வியாக எழுகிறது.

முதற் படலமாம் ஆற்றுப்படலம், காப்பியத்தின் தொடக்கமாக அமைகிறது. 'வான் சிறப்பு'ப் பாடிய வள்ளுவர் மரபில் நீர்ப் பெருக்காம் ஆற்றின் பெருமை காட்டும் போது 'நீரின்றமையா துலகு' (குறள் - 20) என்ற குறளுண்மையைப் புகட்டுவதுடன் 'ஒதிய உடம்பு தோறும் உயிர் என' (1. 1. 20) உலவிய நிலையைக் கூறும் போது இராமன் உலகின் உயிராக விளங்கிய நிலையைச் சுட்டாமல் சுட்டுவதை உணர முடிகிறது. அடுத்துள்ள நாட்டுப்படலத்தில் மருதம் வீற்றிருக்கும் (2. 4) இருப்பினும் அரச அன்னம் துயிலெழுந்த எழுச்சியிலும் (1. 2. 14) நெய்தல் நில வளத்தில் காணும் வேந்தன் காப்பிலும் (1. 2. 19) காப்பியத் தலைவனின் அரசச் செல்வத்தின் பாங்கு இலைமறை காயாகப் புலப்படுகிறது. அடுத்தமைந்துள்ள நகரப்படலத்தில் நகர்க்குக் காப்பாக அமைந்த மதில் கொண்டுள்ள உலகம் அளத்தல் பகைவர் முடித்தலை கோடல், மனுநூல் நடக்கும் செவ்வை, காவல், பலவகை படைக்கலன்கள் பயிறல், சூழ்ச்சி, வலம், உயர்வு, சக்கரம் நடத்தும் தன்மை ஆகியவற்றால் ஒரு நாட்டின் தலைவரை (1. 3. 10) ஒத்துள்ளதாகக் காட்டும் போது இவையெல்லாம் இக்கதைத் தலைவனின் முன்னறிகுறியாம் புறத்தோற்றம் எனக்கொள்ள இடமேற்படுகிறது. இத்தகைய காப்பிய ஆக்கம் இதன் தோற்ற நிலையின் தொடக்கத்தில் தன் தலைவன் பெறவுள்ள பண்புகளைக் காட்டுவதுடன் அவனே நீர் போல் உயிராய் அரசுரிமை தாங்கி மாநில வாழ்வின் காவலாய் விளங்குதற்குரிய அடையாளமாய் இயற்கையாம் ஆற்றுப் பின்னணியிலும் செயற்கையாம் நகரப் பின்னணியிலும் முன்னடையிடுகின்றன.

கதைத்தலைவன் :

இக்கதைக்குத் தலைவன் இராமன் என்றும், அவன் தன் பெருமை மிக்க செயல் புரிந்து வீரக் கழலணிந்தவன் என்றும் அரசியற் படலத்தின் முதற் பாடல்

* இக்கட்டுரையில் காணும் கம்பராமாயணப் பாடலின் எண்கள் எஸ். ராஜம் சென்னை வெளியிட்ட 1958 ஆம் பதிப்பில் உள்ளவை.

இம்மான் கதைக்கு ஓர் இறை ஆய
இராமன் என்றும்
மொய்ம் மான் கழலோன் (1.4.1)

எனக் குறிப்பதால் உணரலாம். பொதுவாக இக்காப்பியக் கதை நாட்டுமக்களின் உள்ள மெல்லாம் நின்று நிலவியதால் இதன் தலைவன் யார் என்பதைத் தொடக்கத் திலேயே கூறுவதால் யாதுமோர் குறை வில்லை.

கதைத் தலைவனின் பிறப்பைத் 'திரு அவதாரம்' எனவே படலத்தலைப்பு எடுத்து ரைக்கும். எனவே தலைப்பின் வாயிலாகவே இராமன் எல்லா மனிதர்கள் போல எளிய பிறப்புடையவன் அல்லன் எனவும், மாந் தருள் மாபெரும் பிறப்பை ஏற்றவன் எனவும் காண்கிறோம். கோசலை அவனைத் திரு வுறப் பயந்தாள். அப்போது அவன் எத்த கையவன் என்பதைப் புலப்படுத்தும் வகையில் உலகெலாம் தன் வயிற்றுள் பொதிந்து வைத்தவன் எனவும் வேதங்களுக்கு உணர் வரியவன் எனவும் கருமேகக் கொழுந்து போல் எழில் படைத்தவன் எனவும் (1.5.101) கூறும்போது அவன் திருமால் அவதாரம் என்பது அவனுடைய செயலாலும் நிலை யாலும் நிறத்தாலும் வெளிப்படுகின்றது. மேலும் அவனே மெய்ப்பொருள் (1. 5. 115). இயற்கை இன்பம் கண்டு களித்ததுடன் நில்லாமல் தங்களுக்கு எதிர்வரும் நாட்டு மக்களைக் கருணையால் முகமலர்ந்து அவர் களின் பணி, வாழ்வில் வரும் இன்ப துன்ப நிலை, குடும்ப நிலை ஆகியவை பற்றி உசாவி அவர்களின் நலம் கேட்டுத் தன் இறைமையை நிலை பெறச் செய்கிறான்.

பெரியோர் தேர்வு :

இத்தகைய இறையவனின் பெருமையை உணர்ந்த கோசிக முனி தம் வேள்வியை அரக்கரிடமிருந்து காக்கத் தயரதனிடம் வந்து துணை வலி நாடு போது 'நின் சிறுவர் நால்வரிலும் கரிய செம்மல் ஒருவனைத் தந்திடுதி' (1. 6. 11) எனக் கேட்கும்போது இதனை இவன் முடிக்கும் என ஆய்ந்து கண்ட முனிவர் நோக்கில் இராமன் சிறப்பு நன்கு வெளிப்படுகிறது. ஆயின் பெற்றவன் பார்வையில் இராமன் படையூற்றம் இல்லாத வனாகவும் சிறியனாகவும் படுகின்றான் (1. 6. 13) தந்தையின் அன்பு நோக்கில் இராமன் சிறியவன் என்ற எண்ணமே எழுகிறது. பல மதங்கள் இறைமையைப் பலவாறு பார்ப்பது போல் இராமனைக் கோசிக முனிவனும் தந்தை தயரதனும் வெவ்வேறு பார்வையில் மதிப்பிடுகின்றனர்.

மரபின் வரலாறு :

இராமனின் வரலாறு விசுவாமித்திரர் வாயிலாகச் சனகனிடம் கூறுவதாக அமைந் துள்ள படலத்தில் ஆதித்தன் குல முதல்வன் மனுவினை யார் அறியாதார் எனத் தொடங்கி மாந்தாதா, சிபி முதலியோர் செயல் வண்மைபேசித் தருமத்தின் கவசமாக விளங்கும் தயரதன், கலைக்கோட்டு முனியின் வேள்வித் துணை கொண்டு எழுதரிய திரு மேனிக் கருங்கடலாம் (1. 12. 22) இராமனைப் புதல்வனாய்ப் பெற்ற செய்தியை மிக விளக்கமாகக் காணும்போது இராமனின் காக்கும் பண்பு நலம் அவனது மரபுப் பெருமையுடன் எழுந்தது எனக் கைந் நெல்லிக் கனியாகக் காண்கிறோம்.

பெரியோரைப் பணிதல் :—

தன் மகனின் மண விழாவிற்கு வந்த தயரதனிடம் முன் பிரிவது ஓர் ஆவி வந்த தென இராமன் அணுகித் தந்தையின் அடி பணிந்து எழுந்தான் (1. 20. 22). இந் நிலையில் இராமன் தயரதனுக்கு மகனாக அமையவில்லை; உயிராகவே விளங்கினான். பிரிந்த இராமனைத் தயரதனின் உயிராகக் காட்டும்போது அடுத்த காண்டத்தில் இராமன் காட்டிற்கு ஏகின் தயரதனும் உயிர்

விடுவான் என்ற முன்னறிவிப்புப் போல் இராமனுக்கு அமைந்த உவமை விளங்கு கிறது. தந்தையை இராமன் வணங்கியது போலவே திருமண மண்டபத்தில் வசிட்ட னும், கோசிகனும் நிலையிற்றிரியாது அடங்கி மலையினும் பெரிதாக மேவியிருத்தலைக் கண்டு மலைமீது பருவமேகம் படிந்தது போல் படிந்து இருவர் தாளும் முறையின் வணங்கினான் (1. 21. 42). இச்செயலில் பெற்றோரையும் பெரியோரையும் வணங்கும் பண்பு இராமனிடம் துலங்குவதை உணர் கிறோம்.

முதன் முதலில் கோமுனியின் வேள்வி காக்கச் செல்கையில் தாடகை எதிர்ந்த போது அவளைப் பெண் என நினைத்து அவளுடன் போரிடா நின்ற நிலையில் இராமனின் பெருந் தகைமை அவன் பெயரில் அமைந்திருப்பதைக் கம்பர் சுட்டுவர் (1.7.35).

தாடகையைக் கொல்வதே அறம் என முனிவர் பல மொழியால் விரித்துக் கூறிய வுடன் சுருக்கமாக இராமன், முனிவன் ஏவும் செய்கையே வேதம் விதித்த செய்கையாகும்' அதுவே அறம் செயும் ஆறு (1.7.44) என எவ்விதத் தடையுமின்றி ஏற்கும்போது சான் றோர் கூற்றை ஆராயாது அதுவே அறமென இராமனின் பண்பு ஏற்றுக்கொள்கிறது.

கொடுங்கோல் விளைவு :—

கோசிக முனிவனோடு அங்கநாடு கடந்த பின் ஒரு பாலைவனத்தைப் பார்க்கின்றனர். அதனைப் பார்த்த இராமன் பழி படர் மன்னவன் பரித்த நாடு போல் இப்பாலை நிலம் அழிவதற்குரிய காரணம் என்ன (1. 7. 19) என்று கேட்கும்போது, அவன் உள்ளத்தில் கொடுங்கோல் வேந்தன் நாடு அழியும் என்ற உண்மை தங்கியிருந்தது வெளிப்படும்.

வானத்தில் வரும் அரக்கரை அழிக்கும் போது அவர் தம் தசையும் இரத்தமும் விசுவாமித்திரரின் வேள்வித் தீயில் வீழ்ந் தால் அது தூய்மையைக் கெடுக்கும் என உணர்ந்து அவ்வாறு நிகழாமலிருக்கும் நெறியை உன்னி முனிவன் வேள்வி செய்யும் சாலையின் மேல் தன் அம்பால் ஒரு கூடம் அமைத்தான் (1. 8. 38). இச்செயலால் ஒரு வினையால் தூய்மை கெட வாய்ப்பிருப்பின் அதனை தடுக்கும் வகையில் முன்னறிவால் எண்ணித் திட்டமிட்டுச் செயலாற்றும் திறன் இராமனிடம் அமைந்துள்ளதை உணர் கிறோம்.

அழகுக் கோலம்

திருமண நாளன்று இராமன் கங்கை நீர் முதலியவை கலந்த தீர்த்தத்தில் மஞ்சனம் ஆடிக் குல முதல் சோதியை வணங்கி, வேதியர்க்குக் கன்னிகா தானம் நல்கிக் கலவை சாத்தி, மாலையும் சுழியமும் சூடிக், குழை அணிந்து, வீரபட்டத்தொடு திலகம் தீட்டித், தோள் அணி வலயம், முத்துமாலை கடகம் அணிந்து, மார்பில் பூணூல் விளங்க, உத்தரீயம் உதரபந்தனம் வெண்ணிறப்பட்டு அணிந்து, உடைவாள், கழல் முதலியவை பூண்டு 'தன்னையே அனையது ஓர் கோலம் தாங்கினான்'. இவ்வாறு அழகுக் கோலம் பூண்டதைக் கடிமணப்படலத்தில் இராமனின் வடிவழகாக முழுவதும் காண முடிகிறது (1. 23. 48 — 68). இத்தகைய அழகைப் பொது நிலையில் கண்டோர் உள்ளம் இராமனின் அழகையும் இறைமைத் தன்மையையும் உணரும்.

அழகிறைமை

விருப்பு, வெறுப்பு, இன்பம், துன்பம், வேண்டுதல், வேண்டாமை என்பவற்றை யெல்லாம் கடந்த உள்ளம் விசுவாமித்திரர் போன்றவர்கள் துறவுள்ளம் ஆகும். அத்தகைய உள்ளம் மதித்த மதிப்பீட்டில் இராமனின் தோள், ஆடவர் பெண்மையை அவாவுந் தோளாகத் (1.7.2) தெரிகிறது. கருநிறம் விளங்க மழைவண்ணத்து அண்ணலாகப் (1.9.24) பொலிகிறது. உலாவியற் படலத்தில் இராமனை கண்டவர் எய்திய நிலையும் புகழ்ந்த மொழியும் எல்லைக்குட் பட்டன அல்ல.

எல்லாம் அறிந்த முனிவர் கண்டது போலவே நகர மக்கள் பார்வையில் இராமனின் தாமரைக் கண்ணழகும், புயல் மேனியழகும், பூவை நிற அழகும் தெரிவதுடன் அவன் கடல் வைகும் கடவுளாகவும் (1.13. 2) தெரிகிறான். எல்லாம் அறிந்த முனிவர் நோக்கிலும், பொதுமக்கள் நோக்கிலும் இராமன் அழகும் இறைமையும் வெளிப்படத் தோன்றுவதை இதனால் அறிகிறோம்.

இருபெரும் முறுவல் :

பால காண்டத்தில் உறுப்பழகில் இராமனின் இறைமையைக் காண்பது போல் வினையழகிலும் இருவகை முறுவல்களைக் காண்கிறோம். அகவாழ்வில் அவன் பூத்த முறுவல் ஒன்று சீதை தன் உயிரை உண்டதாகத் தன் மனத்துட் கூறுவாள். கோதமன் வேள்வி முடித்த வெற்றியுடன் அம்முனிவன் ஆணையை மேற்கொண்டு மிதிலை புகுந்து கன்னி மாடத்தின் மீதிருந்த சீதையை அண்ணலும் நோக்க அவளும நோக்கினாள் (1 10.37). அதன் விளைவாகச் சீதை வேட்கை கொண்டு வெதும்பிய நிலையில்

இந்திர நீலம் ஒத்து இருண்ட குஞ்சியும்
சந்திர வதனமும் தாழ்ந்த கைகளும்
சுந்தர மணிவரைத் தோளுமே அல
முந்தி என் உயிரை அம்முறுவல் உண்டதே
(1.10.56) எனக் கவல்வாள்.

புறவாழ்வில் இராமன் பூத்த முறுவல் மற்றொரு வகைப்பட்டது. சீதையை மணமுடித்து அயோத்தி திரும்பும்போது இராமன் திறம் அறிய எதிர்த்துப் பரசுராமன் வந்தனன். தயரதனோ இராமனும் தன்னுயிரும் அபயம் எனப் பரசுராமனிடம் கூறினான். அப்போதும் அவன் அதைப் பொருட்படுத்தாது தன் பெருமையைப் பலவாறு விரித்துக் கூறித் தன் வில்லை வாங்கும்படி கூறி நின்றபோது நின்ற இராமனும் முறுவல் எய்திப் பரசுராமன் அஞ்ச அவ்வில்லைத் தோளுற வாங்கினான் (1. 24. 35). அம்முறுவல் பரசுராமனின் ஆணவம் அழியவும் அவன் அது வரை செய்த தவம் எல்லாம் நீங்கவும் வழி செய்தது இவ்வாறு அகவாழ்விலும் புறவாழ்விலும் வெற்றி பெறும் உறுதியைக் காட்டும் முறுவலாக இராமன் முறுவல் விளங்கியது. ஒரு முறுவல் இல்லறத்தைக் காக்கவும் மற்றொரு முறுவல் தந்தையின் அச்சத்தைக் காத்துப் பரசுராமன் ஆணவத்தை வென்றும் நின்றது.

பெறற்கரிய மக்கட் செல்வமாகத் தயரதனுக்கு இராமன் பாலகாண்டத்தில் கிடைக்கிறான். பல நாட்கள் மக்கட் பேறில்லாது பின் வருவோர் வருந்துவரே என வருந்திய வருத்தத்தைப் போக்கும் மாமருந்தாகத் தோன்றினான். அதன் பின்னர் மாநிலத்தில் குறைவற வளரும் போது வசிட்டனிடம் மறையினொடு பல் வகைச் கலைகளையும் கற்று வல்லவன் ஆனான். அக்கல்வியின் விளைவே பாலை நிலத்தைப் பார்க்கும்போது கொடுங்கோலன்

ஆட்சி பற்றி நினைத்து அத்தகையது பாலை நிலத்தை மக்கள் வேண்டாது ஒதுக்குவது போல வெறுத்தொதுக்கத்தக்கது என்ற உணர்வைப் புலப்படுத்துகிறான். வசிட்டர் போன்ற முனிவர்களிடம் கல்வி கற்றதுடன் அமையாமல் அரசர்க்குரிய படைக்கலம் பயிறல் முதல் வேறு பல வித்தைகளையும் கற்று வானவர் தலைவன் கிளை முதல் வளர வில் வித்தையும் பயின்றான் எனக் காணும்போது இராமனின் கல்வியும் படைக் கலப் பயிற்சியும் மக்களை மட்டுமன்றி வான வர்களையும் காப்பதற்குரியனவாகவே கொள் கிறான்.

முதலில் தந்தை மறுக்கினும் வசிட்டன் நெறி காட்டுவதால் விசுவாமித்திரருடன் வேள்வி காக்கச் சென்றபோது அவர் அளித்த மந்திரங்களையும் படைக்கலன்களையும் கொண்டு அரக்கரின் கொடுமையிலிருந்து முனிவரின் வேள்வி நலம் காக்கும் நிலை அமைகிறது.

இராமன் வேள்வி முடித்துத் திரும்பும் போது, தன் பாததுளி பட்டவுடன், கல்லுரு வாயிருந்த அகலிகை நல்லுரு அடைந்த போது அவளிடம் 'மாதவன் அருளுண்டாக வழிபடு; படர் உறாதே போது நீ அன்னை' என்னப் பொன்னடி வணங்கிப் (1. 9, 25) போன செயலில் 'தீதிலா உதவி செய்த' பாங்கே ஒளிவிட்டு நிற்பதை அகலிகைப் படலத்தின் முடிவில் அறிகிறோம்.

அழகனாம் இராமன் 'அழகு தவம் செய்து பெற்ற' சீதையை வில்லொடித்துத் திருமணம் செய்ததில் இல்லறம் காக்கும் பாங்கிற்கு வித்திட்டு அதில் எத்தகைய துன்பங்கள் எதிர் காலத்தில் வரினும் அதை ஏற்று நிற்கும் நிலை உருவாகிறது.

எழுச்சிப்படலத்தில் காணும் ஒரு பாடலில்

பிள்ளைமான் நோக்கியைப் பிரிந்து
போகின்றான்
அள்ளல் நீர் மருதவைப்பு அதனில்
அன்னம் ஆம்
புள்ளும்மென் தாமரைப் பூவம் நோக்கினான்
உள்ளமும் தானும் நின்று ஊசலாடினான்.
(1. 14. 26)

எனக் காணும் போது புணர்தல் என்பதில் பிரிதலும் அடங்கியுள்ளது. எனவே சீதையை இராமன் மணப்பினும் பின்னர்ப் பிரிதல் நேரிட வாய்ப்புள்ளது. அவ்வாறு பிரியினும் இல்லறநெறியைக் காப்பதே தலைவன் நெறியாக அமைகிறது.

அதன் பின்னர்க் காணும் சந்திர சயலப் படலத்தில் படைமாட்சியின் விளைவாக மயிலினம் திரிவதுபோல மகளிரும் (1. 15. 29) அரி திரிவ என்ன மைந்தரும் (1. 15.30) திரியும் வாழ்வு காப்புடையதாக அமைவதும் அதன் அடிப்படையில் செங் கோல் மிளிர்வதும் புலனாம். தொடர்ந்து வரைக்காட்சிப் படலம், பூக்கொய் படலம், நீர் விளையாட்டுப் படலம், உண்டாட்டுப் படலம் போன்றவை இல்லறச் செல்வத்தின் காப்பாக அரசு விளங்குவதை எதிர்மறை நெறியில் 'கடைஉற நல்நெறி காண்கிலாத வர்க்கு இடைஉறு திரு என இந்து நந்தினான்' எனச் சந்திரன் மறைவைக் கூறி 'படர்திரைக் கருங்கடல் பரமன் மார்பிடைச் சுடர்மணிக்கு அரசு என இரவி தோன்றினான்' (1. 19. 67) என்று

கதிரவன் தோற்றத்தைக் காட்டும்போது இன்பச் செல்வம் காக்கப்பெறுதற்கு இராமன் எனும் அரசுக்கதிர் தோன்றியதைக் குறிப்பாகச் சுட்டும்.

மணம் முடிவதில் தனக்குரிய இல்லறம் காக்கப் பெறும் நெறி தோன்றப் பரசுராமப் படலத்தில் தன் தந்தையின் கவலையை மட்டும் பரசுராமனை அடக்கிய நிலையில் போக்காமல் அரசகுலத்தை வாட்டிக் கொண்டிருந்த அத்துணை அச்சத்திற்கும் முடிவு கட்டித்தான் பிறந்த அரசகுலத்தையே காத்த பண்பு வெளிப்படுகிறது.

பாலகாண்டத்தில் இராமனின் பிறப்பும், எழிலும், கல்வி நலமும், கலைப் பயிற்சியும் பிறந்த குடியின் பெருமையைக் காத்தன; வேள்வி புரியும் முனிவர் மரபைப் பகைவரிட மிருந்து காத்தன; மக்களின் இன்ப நலத்தைக் காத்தன; அரசர்களின் குலத்திடையே நிலவிய அச்சத்தை நீக்கி என்றும் அழியாக் காப்பினை நல்கின. காப்புத் தெய்வமாம் திருமாலின் அவதார உண்மையின் வெளிப்பாடாக பால காண்ட இராமன் விளங்குகிறான்.

தக்கை ராமாயணம்

கம்பராமாயணத்தின் மாற்று வடிவம் — ஓர் அறிமுகம்

கு. அருணாசலர் கவுண்டர்

பத்தர் பாடி எம்பெருமான்

கி. பி. 17-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில், கர்த்தாக்கள் என்ற மதுரை நாயக்க மன்னரது சுயாட்சியில் நிகுதி (வரி) செலுத்தாமல் சாக்குப் போக்குச் சொல்லிக் காலங் கடத்தியும் கலகம் செய்தும் வந்த பாளையப் பட்டுகள் பட்டக்காரர்களைச் சிறை வைத்துச் சித்ரவதை செய்த இடந்தான் சங்ககிரி துர்க்கம். பவானியிலிருந்து சேலம் செல்லும் பெருவழியில் கோட்டை கொத்தளங்களோடு சங்கு வடிவில் தோன்றும் குறுமலையே சங்ககிரி துர்க்கம். திருமலை நாயக்கன் ஆட்சியிலே தளவாய் ராமப்பையன் அங்கே முகாமிட்டிருந்தபோது, கோயில் கொண்ட வரதராசப் பெருமாளுக்கும் சென்ன கேசவப் பெருமாளுக்கும் ஒரு மண்டலம் சகஸ்ரநாம அருச்சனையும் பிராமண சமாராதனையும் செய்ய வேண்டிப் பரம்பரைப் பூசாரியான யாதவரை நீக்கிப் பட்டாசாரியரை நியமித்தான். மண்டல பூசை முடிந்ததும், தென்கலை வைதிக பூசையே தொடர்ந்து நடந்து வருமாறும் ஆணைப் பிறப்பித்தான் அது வரையிலும் பூசை செய்து வந்த கோனாருக்குக் கோவிந்தப்பட்டம் கொடுத்துத் தலப்பட்டக்காரனாக ஆணை நியமித்தான். இந்த பட்டக்காரனின் பாட்டன் அல்லது பூட்டன்தான் எம்பெருமான் என்னும் பெயர் கொண்ட கவிராயர்.

பத்தர்பாடி எம்பெருமான் என்று இவர் சொல்லப்படுகிறார். இடைப்பாடி என்பது போல பத்தர்பாடி என்பது சங்ககிரியைச் சேர்ந்த ஓர் ஊர் போலும். அங்கே அரசு அதிகாரத்திலே அவர் இருந்திருக்கிறார். மதுரைக்கு மாற்றப்பட்டுப் பதவி உயர்வு பெற்று, அரச சமுகத்திலும் இருந்திருக்கிறார். அழகர் கோயிலில் தம் குலத்துப் பெண் பூங்கோதை என்பாளை மணந்து மதுரையிலே சிலகாலம் வாழ்ந்திருக்கிறார். முத்துவீரப்ப நாயக்கர் (கி. பி. 1609 - 23) அரசு கட்டில் ஏறியபோது அவரால் பெரு மதிப்புப் பெற்றுத் தாம் பிறந்த ஊரான சங்ககிரிக்குத் திரும்ப வந்தார்.

இவர் மனைவியான பூங்கோதை, கணவனைப் போலவே தமிழ்ப் புலமை வாய்ந்தவராம். வடமொழிப் பயிற்சியோடு வேதாந்த ஞானத்திலும் தேர்ந்து தெளிந்தவராம். தாரமங்கலம் கட்டி முதலியார் மனைவி சின்னம்மாளுடன் சேர்ந்து, கண் ஒளி கதிர் ஒளி என்ற அத்துவித ஞான நூல் இயற்றினார் இயற்றினார். என்று தெரிய வருகிறது. சின்னம்மாளின் கல்வெட்டு பவானி சங்கமேசுரர் கோவிலில் இருக்கிறது. பூங்கோதை, திருச்செங்கோட்டுக் குறவஞ்சி பாடியிருக்கிறார். அதன் ஏட்டுப்பிரதி பேரூர் ஆதினத்தில் இருக்கிறது.

எம்பெருமானின் வாழ்க்கை வரலாறாக நாம் அறிவது மிகச் சொற்பமே. நம்மாழ்வார் இவ்வாறு மணவாள மாமுனிகள் வளர்த்த வைணவ தர்மத்திலே பரம பாகவதராய் வாழ்ந்திருக்கிறார். இராம பிரானது அபூர்வ குணங்களும் அரிய வீரச் செயல்களும் தியாக உணர்வும் இவரை ஆட்கொளவே, சுகதுக்கங்களிலே சாதாரண மனிதனாக இருந்து, மனிதனுக்கு இருக்கும் குறைகளைக் கடந்து, தன் தெய்வ இயல்பை வளர்த்து, மக்களுடைய இதயத்திலே இடம்

பிடித்த அப்பெருமாளிடம் பேரன்பும் பக்தியும் கொண்டு, 'செவிக்குத் தேன் என இங்கவன் புகழினைத் திருத்தும் கலிக்கு நாயகன்' ஆகிய கம்பனுடைய காவியத்திலே திளைத்திருந்தார். தமக்கே உரிய பாணியில் கம்பராமாயணக் கவிதைகளை இசைனியப்பாடி, அக்காவியப் பொருளை வித்தாரமாகவும் வினயமாகவும் விளக்கிக் காலட்சேபம் செய்து வந்தார்.

நல்லதம்பிக் காங்கேயன்

இதை அத்தப்ப நல்லதம்பி என்ற மோரூர் காங்கேயன் 1 நாள்தோறும் கேட்டுப் பரவசப்பட்டுத் தனது ஆன்ம ஞான அனுபூதிக்கு அடுத்தபடியாகக் கம்பர் காவியம் தரும் இன்பமே மிகச் சிறந்தது என்று உணர்ந்து, எம்பெருமான் அவர் பிரவசனம் செய்து வந்தபடியே கம்ப இராமாயணம் முழுவதையும் அதன் கட்டுக் கோப்பு கற்பனை வளம், பத்திரங்களின் பண்பு, நாடக பாவம் முதலிய குலையாவாறு எழுதித் தருமாறு வேண்டினான். இவன் விருப்பத்தை அவரும் ஏற்று, சங்ககிரி மேற்கு ரங்கம் என்ற வரதராசப் பெருமாள் சந்நிதியை அடைந்து, விண்ணப்பித்து நிற்க, உலக மாதா என்று தோன்றிய சொல்லையே மங்கல மொழியாகக் கொண்டு, ஒற்றை இரட்டை என்ற வரிப் பாட்டுகளில் தக்கையின் தாள கதிக்குத்தக ஆறு காண்டங்களையும் 3250 இசைப் பாடலாகப் பாடி முடித்து, வரதராசப் பெருமாள் சந்நிதியிலே அரங்கேற்றினார். இப்படி தோன்றியது தான் தக்கை ராமாயணம்.

கம்பரைக் கொண்டு இராமாவதாரம் பாடுவித்தவன் சடையப்பவள்ளல். இவருக்குக் கண்ணன் சரராமன் என்ற பெயர் உண்டு. இவருடைய ஊர் வெண்ணெய் நல்லூர். இவரைப் போலவே, தக்கை ராமாயணம் பாடுவித்தவன் நல்ல தம்பி, இவன் தன் ஊர் போரூர். ஆகவ ராமன் என்ற பேரும் இவனுக்கு உண்டு. இவனும், கண்ணன் அதாவது கண்ண குலத்தான்.

எம்பெருமான் பாடுகிறார்.

அவனும் சடையன் காராளன்
அவன்தன் ஊரும் வெண்ணெய் நல்லூர்—
இவனும் நல்லதம்பிக் காங்கேயன்
இவன்தன் ஊரும் போரூராம் —
அவனும் கண்ணன் சரராமன்
ஆகவராமன் இவனும் கண்ணன் —
இவனும் அவனைப்போல்உ லகுதனில்
இராம கதைதனைப் பாடுவித்தான்

கம்பருக்குச் சடையன் போல எம்பெருமானும் தனக்கு வாய்த்த நல்லதம்பியை, கதைப் போக்கிலே இடையிடையே புக வைத்துப் புகழ்ந்து செல்வார்; இராமனுடைய பிரிவால் வருந்தி மெலிந்திருந்த அயோத்தி மாந்தர், இராமன் நாடு திரும்பினான் என்று நந்திக்குன்மம் சென்று அவனைக் கண்டு மகிழ்ந்து செய்த ஆரவாரம் நல்லதம்பி இனிம கதை முற்றும் பாடுவித்த புகழ் போலத் திசை எங்கும் பரவியதாம்.

வராமல் மெலிவுற்ற நகரிசனம்

வரதன் வரக்கண்டு மகிழ்ந்து, நந்திக்

கிராமந் தனிலுற்று அனைவருடன்

கெழுமி ஆர்க்கின்ற கிளர்ஓசை,

அராமன் அருள் பெற்ற போரூரான்

அர்த்த நாரி சொல் நல்லதம்பி

இரிம கதை முற்றும் பாடுவித்த

இசைபோல் உலகெங்கும் செவிக்
கொண்டதே.

தக், திருவடி — 22.

தக்கை ராமாயணம்

கம்பராமாயணத்தின் தனிக் காப்பியச் சிறப்பும், அதன் கற்பனைத் திறனும் உன்னத மான கருத்துச்சரம் நாடக உத்தியும் எம் பெருமானை முற்றிலும் தம்வயம் ஆக்கியிருந் தன; அந்தத் தெய்வபாக் கவிதையின் அழகு அனைத்தையும் ஆழ்ந்து அனுபவித்து அந்த ஆனந்தத்திலேயே திளைத்திருந்தார். அந்தத் தம் அனுபவத்தை எடுத்து வழங்குவதையே வாழ்வின் தனிப்பெரும் நோக்கமாகக் கொண்டு அதற்கென்றே தம்மைத் தத்தம் செய்திருந்தார். அதனால், இவரது உள்ளத் திலிருந்து உணர்ச்சி மயமாய்க் கம்பரது கருத்துகள் கற்பனைகள், அவைகளைத் தாங்கி நிற்கும் சொற்கள், சொல் தொடர்கள் எல்லாம் அடுக்கடுக்காய் எழுந்து, ஒன்றோ டொன்று இசைந்து, கான விலாசமாய் உளங்கசிந்து பெருகியவைதான் தக்கை ராமாயணக் கவிகள். கம்பரது தெய்வீக கீதத்திலே தோய்ந்து தோய்ந்து, அதன் வயமாகி, அதை இசைப்பதற்கென்றே ஓர் அரும் பெறல் வீணையாகத் தம்மை மாற்றி அமைத்துக் கொண்டார். அதன் கீதம்தான் தக்கை ராமாயணம்.

உணர்ச்சி வேகத்திலேதான் ஒரு படைப் புத் தோன்றும், அதற்கு வேண்டிய பாதையை அதுவே வகுத்துக்கொள்ளும். உதாரணமாக வால்மிகியின் சோகம், ஒரு சுலோகமாகக் கசிந்தது. அந்த சோக உணர்ச்சி தனக்குரிய நெறியைத் தானே அமைத்துக் கொண்டு ஒழுங்காய் ஓடியது. இதைப் போலத்தான் எம்பெருமான் உள்ளத்திலே பொங்கித் ததும்பிப் பூரித்திருந்த கம்பரசனை, தக்கை இசைப் பாடலாய்ப் பிரவகித்தது. எம் பெருமான் கூறும் புலவர் மட்டும் அல்ல கவிஞர் இரசிகர் பக்தரும் கூட, பக்தராயும் கலைஞராயும் இருந்ததால்தான், கம்பர் தரு இனிம கதையை பக்தி சிரத்தையோடு அனுபவித்து அவரது இன்ப அனுபவம், புதிய யாப்பில் இசைப் பாடலாகப் பரிணமித்தது. இப்பாடல்களின் அமைப்பு எதுகை, மோனைகள், சொற்கட்டுகள், அவை போடுகிற தாளங்கள் எல்லாம், கம்பரது இதய பாவத்தை உட்கொண்ட உணர்ச்சியோடு ஒட்டிய நேர் அனுபவத் தினின்றும் வந்தவைதான்.

கம்பர் தமது காவியம் முழுவதையும் விருத்தப்பாக்களாலேயே ஆக்கியிருக்கிறார், இவர் கையிலே விருத்தவகை முழுவளர்ச்சி பெற்று கணக்கற்ற ஓசை நயங்களுடன் விளங்குகிறது. அதனால் ‘விருத்தம் எனும் ஒண்பாவில் உயர் கம்பன், என்பது, புலவர்கள் ஒப்புக் கொண்ட உண்மை. கம்பருடைய விருத்தங்களுக்கு முன் பிறர் விருத்தங்கள் எடுபடா என்பதால் அவருடைய காவியத்தைத் தக்கை இசையில் பாடுவதாக ப்பாயிரத்தில் எம்பெருமான் சொல்கிறார்.

தக்கை இசை

தக்கை இசை என்று இவர் சொல்வது நாட்டார் பாடலின் இசை வடிவம் தான்.

இது வருமாறு :

தன் மகவு அழுத கண்ணீர்,
வாய்க்காலாய் ஓடி அங்கே
வழிப் போக்கர் சந்தி செய்ய
இஞ்சிக்குப் பாய்ந்து — நல்ல
இருவாட்சி வேரோடி,
மஞ்சளுக்குப் பாய்ந்து — நல்ல
மருதாணி வேரோடி
தாழைக்குப் பாய்கையிலே
தழும்பினதாம் கண்ணிரு,
வாழைக்குப் பாய்கையிலே
வற்றிய தாம் கண்ணிரு.

இவ்வகைப் பாடல்கள், பேச்சு வழக்கில் உள்ள வசன நடை வடிகட்டப்பட்டு, சொற்களுக்குள்ளே உள்ள ஒலி நயச் சேர்க்கை, கவிதைப் பொருளுக்கும் உணர்ச்சி பாவங்களுக்கும் தகுந்தவாறு இயங்குவதால், அதிகக் கவர்ச்சியுடனும் சக்தியுடனும் விளங்குவதில் வியப்பில்லை.

ஏற்ற நீர்ப் பாட்டின்

இசையினிலும் நெல்லிடிக்கும்
கோற்றொடியார் குக்கூ எனக்
கொஞ்சும் ஒலியினிலும்
சுண்ணம் இடிப்பார்தம்
சுவை மிகுந்த பண்களிலும்

நெஞ்சைப் பறிகொடுத்ததாகப் பாடும் நம் பாரதியார், நாட்டார் பாடலின் இசைப் பண்பை முதன்மைப் படுத்தியவர்

இந் நாட்டார் பாடலின் யாப்பமைதி அடிதோறும் காய்ச்சீர் நான்காய் மூன்றாம் சீர் மோனையுடன் வெண்சீர் வெண் தளையொடு கலித்தளையும் கலந்து, அதனால் துள்ளல் ஓசைமேவி, கவர்ச்சியான ஒலி நயத்தோடு இசைக்கிறது. தக்கை அல்லது உடுக்கையின் தாள கதிக்குத்தக இசை கூட்டி இதைப் பாடுவதால், இதைத் தக்கை இசை அல்லது தக்கைப் பாட்டு என்பது கொங்கு நாட்டு வழக்காறு. இதன் வளர்ச்சியே அதாவது அளவடியாய் முதற்சீர் எதுகை பெற்று வந்தால் அதுவே யாப்பியலார் கூறும் தரவுக் கொச்சகம் அல்லது கொச்சகக் கலி.

திருவாசகத்திலே

ஈசனவன் எவ்வுயிர்க்கும்
இயல்பானான் சாழேலோ

என்று மகளிர் கைகொட்டி நகைத்துப் பூவல்லி கொய்வதும், மற்றும் பொன்னூசல் அம்மானை, பாவை, கோத்தும்பி முதலிய வரிப் பாடல்கள் யாவும் நாட்டார் பாடலினின்றும் பரிணமித்த கொச்சகக் கலிப்பா ஆகும்.

தக்கை ஒருவகை இசைக்கருவி

இவ்வகைப் பாடலைத்தான், 'இசை நுவல் மறபின இயன்ற செய்யுள்' என்பர். ஆங்கிலர் லிரிக் (Liric) என்பர். லயர் என்ற ஒருவகை யாழுடன் பாடப் பட்டதுதான் அது. லயர் வழக்கற்றுப் போன பின்பும், அதனுடன் பாடப்பட்டு வந்த பாடல் மட்டும் லிரிக் என்ற பெயரிலேயே வளர்ந்து தனிச் சிறப்பு அடைந்திருக்கிறது. இதைப் போலவே தமிழிலும் தக்கை கொட்டியும் தெள்ளேணம் கொட்டியும் பாடும் வழக்கம் இருந்திருக்கிறது. இவற்றுடன் பாடப்பட்டு வந்த பாடல்கள் மட்டும் கிடைத்திருக்கின்றன. தக்கையும் தெள்ளேணமும் மறைந்து விட்டன. தெள்ளேணம் என்பது தெளிந்த ஓசை என்னும் பொருளில் படகம் என்ற தோல் கருவியை உணர்த்தும்.

தென்னா தென்னா என்று தெள்ளேணம் கொட்டாமோ என்பது திருவாசகம். தக்கை என்ற இசைக் கருவியைக் காரைக்கால் அம்மையார் குறிப்பிடுவர். 'சச்சரி கொக்கரை தக்கை யொடு' என்பது அவர் பாடல் ஒன்றன் பகுதி. ஞான சம்பந்தரும் மொந்தையொடு தக்கையைக் குறிப்பிடுவார். சிலப்பதிகார உரையிலே அடியார்க்கு நல்லார், அகப்புற முடிவு என்ற தக்கையை இனங்காட்டுவார். திருவரங்கம் பெரிய கோயிலில் ஆண்டுதோறும் இரண்டு திருவிழாக் காலங்களில், (கார்த்திகை மாதம்) அரையர்கள் திருநெடுந்தாண்டகம் சேவிக்கும் போதும். மார்கழியில் இராப்பத்து பகல் பத்து — திவ்வியப்பிரபந்தம் சேவிக்கும் போதும் அதற்குத் துணைக் கருவியாகத் தக்கை வாசிப்பார்கள். கொங்கு நாட்டிலே சமீப காலம் வரையிலும் தக்கை பிரபலமாய் இருந்திருக்கிறது. திருமணத்திலே மாப்பிள்ளை பெண் கொள்ள ஊர்வலமாய்ப் போகும்போது, அவனை

> பட்டன் புலவன் பண்பாடி தக்கை
> கொட்டி
> திட்டமாய்ச் சோபானம் சொல்லி
> முன்னே வர
> வன்மைசேர் கூத்தி வகை பெற நின்று
> நன்மை சேர்பரத நாட்டியம்
> ஆடிவர

பட்டன் புலவன் முதலியோர் எதிர்கொள் வார்கள். பட்டனும் புலவனும் — வாழ்த்துக் கூற இசைத்தமிழ் வல்ல பண்பாடியும் தக்கை கொட்டும் தாளக்காரனும் பரத நாட்டியம் வல்ல பாவையரும் அவ்வூர்வலத்தை அலங் கரிப்பார்கள். கொங்கு 24 நாட்டாரும் கூடித் திருமணத்தை நடத்தும் ஐதிகமாக, நாட்டார் களுக்குத்

> தாளமுதல் வீணை குழல்
> தக்கை பம்பை சங்குசின்னம்
> தாளமுடன் பேரியங்கள்
> கனைகடல் போல் நின்று அதிர

சீர் செய்கிறார்கள். தலைப் பேற்றுப் பிள்ளை பிறந்தால், வாசற்படி வழித்துப் பிள்ளையார் பிடித்து வைத்து, பிள்ளைத் தமிழ் பாடல் பத்தும் தக்கைப் பாடல் பத்தும் பாடிக் குழந்தையை வாழ்த்தும் மரபு இருந்தது. தக்கைப் பாடல் கொங்கு நாட்டிலே பெரு வழக்காய் இருந்திருக்கிறது. இதை அந்நாட்டு ஏர் எழுபது போன்ற சிற்றிலக்கியங்களிலே காணலாம். பாரத இதிகாசத்திலே வரும் கபிலை கதையை நாம் அறிவோம். தக்கை இசையிலே நூறு பாடல்களாய்த் தமிழிலும் அந்தக் கதை வழங்குகிறது. அதைப் பாடியவர் கொங்கு வேளிருள் புல்ல குலத்தைச் சேர்ந்த வேங்கை யர்கோன். அவையடக்கமாக அவர் கூறுவது

ஒப்பிலாக் கபிலகதை
நக்கையில் நான் பாடுவது,

முப்பழமும் நல்லமுதும்
முசியாமல் உண்பவர்க்கு

கைப் பொருள்இல் லாம்ஒருவன்
கடப்பாடெல் லாம்ஒழிந்து

உப்பில்லாக் கூழைஇட்டு
உபசரித்து நின்றதொக்கு

இத்தகைய பாடல் பேச்சு மொழியின் ஒலியன்களையும் உருபன்களையும் கொண்டு கவர்ச்சியான கட்டுப் கோப்புடன் இசை கூட்டிப்பாடக் கூடியதாய் இருக்கிறது. இதை எடுத்துப் பாடுகிறவனுடைய சொல் முறை, ஒலி அழுத்தம், சுரம், பேதம், குறல் வளம், இவைகளைச் சார்ந்ததாய் இருப்பது, தக்கைப் பாடலின் தனிச்சுவை, சுருக்கவோ நீட்டவோ, குறுக்கவோ கூட்டவோ, நோக்கவோ, சுற்றி வளைத்தோ அப்பாடலை எடுத்து இயம்புகிறவனுடைய உள்மன உணர்ச்சி வெளிப்படும் விதத்திலே அதன் மொழி நடை அமைந்திருப்பது வியப்பே.

இசைத்தமிழ்க் காப்பியம்

இவ்விதம் நாட்டார் இலக்கிய வகையில் தக்கை ராமாயணத்தை ஒரு இசைத்தமிழ்க் காப்பியமாகப் படைத்திருப்பது, 17–ம் நூற்றாண்டின் பெரிய தமிழ்ப் பணியாகும் நானூறாண்டுகளுக்கு முன்னம் கற்றோரை நோக்கியே மற்றவர்கள் செய்யுள் இயற்றி வந்தபோது, எம்பெருமான் பாமரமக்களைக் கருத்திலே கொண்டு, கல்வியிற் பெரிய கம்பன் காவியத்தை நாட்டார் இலக்கிய வகையிலே மாற்றி அமைத்து, புதுமாதிரி ஒன்றை நூதனமாய்ப் படைத்து ஒருபெரிய இலக்கிய சாதனையை சாதித்திருக்கிறார்.

இராமன் வனம் ஏகினான் என்று, பரதன் மிகுந்த துயரத்தோடு நடந்து வந்து கங்கையின் வடகரையில் சேர்ந்தான். எதிர்க்கரையிலே இருந்த குகன். இவ்வளவு படையும் இராமனைத் தாக்க வந்திருக்கிறது என்று எண்ணினான். எண்ணவுமே கோபம் பொங்கி வந்தது. கச்சையை இறுகக் கட்டி, நறநற என்று பற்களைக் கடித்தான். வெகுளியாய் கண்களில் தீப்பொறி பறக்கப் படபட என்று வார்த்தைகள் தெறித்து வந்தன. துடியைக் கொட்டிக் கொம்பை ஊதி, புலிகள் போன்ற தன் சேனையைத் திரட்டினான். பாடுபவர் எம்பெருமான் :

கச்சை கட்டி விற்பிடித்துக்
கச்சையின்மேல் கெட்டை கட்டி

செச்சை கொட்டி இப்படைஞர்
சிற்றெலியாம், நாள் அரவம்

விச்சை கெட்ட இவரை விண்மேல்
விடுபன் என்றான் மேதினிமேல்

இச்சை கெட்டு வந்ததென்றான்
எழுக என்றான் தனபடையை

இராமனுக்கு உரிய அரசை வஞ்சகச் சூழ்ச்சியால் பறித்துக் கொண்டதோடு நில்லாமல் அவனைக் தாக்கப் பரதன் வனத்துக்கும் வந்து விட்டானே என்ற எண்ணம் வரவும் தன் கை வில்லைப் பார்த்தான். என் அம்புகள், சக்ரவர்த்தி என்பதால் பரதன் மார்பைத் தைக்காவோ — பாடுவார் எம்பெருமான்

மஞ்சனைய நம்பாமன் அம்புவியை
ஆளாமே
வஞ்சனை புரிந்துஅரசு கொண்ட
கொடி யாரோ
வெஞ்சமர் மலைத்திடவும் வந்து
அணுகினாரோ
வெம்பும் எனது அம்பு அவர்கும்பு
குலையாதோ
குஞ்சரம் நிறைந்தபடை நம்படைமுன்
நேரோ
கொண்டுநதி யின்கறை கடந்துசெலு
வாரோ
தஞ்சமிகு தம்பினும் நம்பி பொருளாலே
தந்துயிர் வழங்கிடினும் நன்று
தகவாமே

இப்பாடல்களின் சீரமைப்பு ஒரே விதமாக இருந்தாலும் இசைக் கூட்டிப் பாடும்போது வெவ்வேறு முறைகளிலே பாடக் கூடிய வகையில் அமைந்திருப்பது வியப்பே. இதைப் பாடுதற்குப் பெரும்பாலும் பயன்படுவது,

தானை தந்தோம் தானை தந்தோம்
தந்தினத்தோம் தானைதந்தோம்

என்ற சந்தந்தான். கதையின் சூழ்நிலை உணர்ச்சி வேகங்களுக்குத்தக கீழ்வரும் சந்தத்திலும் பாடலாம்.

தந்தனைத்தோம் தானை தனனா —
தான தத்தோம்
தந்தனைத்தோம் தானை தனனா

இந்த சந்தக் குறிப்பை வாயிலே அசை போட்டுக் கொண்டு பாடலைப் பாட வேண்டுமே தவிர, வசனம் போல வாசிக்கக் கூடாது. பாடுதற்கு இராகம் வராது என்பதில்லை. சவுக்கத்திலே பாடுதற்கான ஒரு வகைப் பண்ணிசை நம் உள்ளத்திலே ஊறிக் கிடக்கிறது. வெட்கமோ கூச்சமோ குறுக்கிடாது. வாய்விட்டுப் பாடத் தொடங்கினாலே போதும். பாடலின் தாளமும் இசையும் தாமாகவே வந்து நம்மை ஆட்கொள்ளும் தக்கை ராமாணயம், படிப்பதற்கு அன்று பாடுதற்கே அமைந்தது. பிறர்பாடக் கேட்கலாம். கேட்கும் அனுபவத்துக்கும் நாமாகப் படிப்பதற்கும் எத்தனையோ வேறுபாடு. செம்மையான உள்ளத்தோடு கேட்கும்போது, செய்யுள், ஒளிவிசும் மணிபோல பலப்பல உணர்ச்சி அலைகளைப் பரப்பி, நம்மைப் பரவசப்படுத்தும்.

காப்பியச் சுருக்கம்

சிலப்பதிகாரம், கோவிலன் கதை என்று நாட்டார் பாடலாய் உருமாறி வழங்குகிறது. சீதா கல்யாணமும் உருமாற்றத்துடன் வில்லுப் பாட்டாய் வழங்குகிறது. இவை மூல நூலைத் தழுவியோ இலக்கிய நயம் வாய்ந்தவை என்றோ சொல்வதற்கு இல்லை. சிந்தாமணியும், சீவகன் அம்மானையாய் வடிவம் மாறி, ஓலைச் கவடியிலே இருக்கிறது. மேரு மந்திர புராணம் என்ற சமணநூல், அம்மானையாப்பில் மாலை என்ற வடிவமைப்பில் வழங்குகிறது. தக்கை ராமாயணத்துக்கு முன்னமேயே காப்பியச் சுருக்கங்கள் தோன்றியிருந்தன. கொங்குவேள் மாக் கதையைக் கந்தியார் என்ற பெண் துறவி, உதயணன் காவியம் என்று, 369 விருத்தங்களிலே பாடினார். சம்பந்த சரணாலயர் என்ற முனிவர், பத்தாயிரம் பாடல்களாகச் சமைந்த கந்தபுரணத்தை ஒராயிரம் பாடல்களிலே சுருக்கினார். இவையாவும் மூல நூலின் விரிவான கதையைப்பத்தில் ஒன்றாகக் குறைப்பதிலேயே கருத்தாய் இருந்தனரே அன்றி, காப்பியத்தை எளிமை யாக்கியிருக்கிறார்கள் என்றோ, அதை மேலும் மெருகு

படுத்தியிருக்கிறார்கள் என்றோ சொல்வதற்கு இல்லை. இவர்களின் வேறானவர். எம்பெருமான்.

கம்ப ராமாயண நடை மொத்தத்தில் எளிமையாக இருந்தாலும் ஓரளவு மொழிப் பயிற்சியும் கலையுணர்வும் வாய்ந்தவர் தான் அதைப் புரிந்து கொள்ள முடியும். 'கம்பன் மொழி செந்தமிழின் கவித்திறத்தின் காட்சி' யைக் கற்றறிந்த ஒரு சில புலவரே தெரிந்திருந்தனர். இவர்கள், தாம் பெற்ற இன்பத்தை மக்களுக்கு எடுத்து இயம்பியும் வந்திருக்கின்றனர். அவர்களிலே ஒருவர் தான் எம்பெருமான். கம்பர் காப்பியத்தை பிரவசனம் செய்து வந்ததோடு அல்லாமல் நாட்டார் பாடலாய் அதன் பத்தாயிரம் கவிகளையும் 3250 இசைப் பாடலாய் மூன்றில் ஒன்றாய்ச் சுருக்கினார். இதன் மூலம் தமிழ் இலக்கிய வகையிலே புதுமாதிரி ஒன்றைப் படைத்தார். இவர் படைப்பை கதைச் சுருக்கம் அல்ல, காவ்யசங்கிரகம் என்னலாம். உதாரணமாக இரண்டொன்றைக் குறிப்பிடுவோம்.

மிதிலை வீதியிலே விசுவாமித்திரருடன் செல்லும் இராம லக்குமணரை, அந்நகரத்துப் பெண்கள் தத்தம் வீடுகளிலிருந்து பார்க்கின்றனர். மாளிகை முகப்பில் உள்ள சன்னல் வழியாக அவர்கள் பார்ப்பதே ஓர் அழகு. பகலிலும் பூரணச்சந்திரோதயம் என்று பிரமிக்கும்படி இருக்கிறது அவர்களுடைய முகப் பொலிவு. அதனால் வீடுகள் தோறும் சந்திரோதயம்தானாம். அந்த வதனமதிக்கு அழகு செய்கின்றன வேல் போன்ற கண்கள் வில் போன்ற புருவம், சுருண்ட கருங் கூந்தல். பாடுவார் கம்பர் :

வாளரம் பொருத வேலும்
மன்மதன் சிலையும் வண்டின்
தோளொடு கிடந்த நீலச்
சுருளும் செங் கிடையும் கொண்டு
நீளிரும் களங்கம் நீக்கி
நிறைமணி மாட நெற்றிச்
சாளரம் தோறும் தோன்றும்
சந்திர உதயம் கண்டார்.

இதையே,

மின்னிருக்கும் சாளரத்துள்
வேல் இமைக்கும் திங்கள் கண்டார்

என்று நயமாய்ச் சுருக்குவார் எம்பெருமான்.

அயோத்திய காண்டம் — தயிலம் ஆட்டுப் படலம்: பூவை மிதிப்பினும் பொறாத சீதையின் மென்மையான பாதங்கள் கல்லும் முள்ளும் மிகுந்த கானகத்தில் இராமனைத் தொடர்ந்து நடந்தன அல்லவா? இவ்வாறு செல்ல அவளுக்கு ஆற்றல் தந்தது, கணவன் பால் அவள் கொண்ட அன்பே. அன்பினும் வலிமை தருவது வேறென்றில்லை.

உறுவலி அன்பின் ஊங்கு ஒன்று
உண்டென உணர்வதுண்டோ

என்பார்கம்பர். இதனையே எம்பெருமான்,

பஞ்சிற் பதத்தாளும் வனத்திற் சென்றாள்
பரிவிற் பெரிதான வலிஒன்றுண்டோ என்பார்.

தசரதன் இறந்து போனதை அறிந்திருந்தும், இராமன் நகர் திரும்பவில்லை என்பதைத் தெரிந்து, நகர மாந்தர் ஆற்றொணாத் துயரம் அடைந்தார்கள் அல்லவா? அவர்கள் இறந்தார்கள் இல்லை,

என்? யார், எவ்வக் காலத்திலே இறத்தற் பாலர் என்று விதி நியமித்திருக்கிற காலாவதிகள் எய்தவில்லை, அதனால்தான்,

ஆவி, அகாலத்தே அகலுமோ

அவதி என்று ஒன்று உளதானால்

என்பார் கம்பர்.

இதையே இன்னும்

உளகாலம் இருக்கத் தக்கார்

என்ன துயர் உற்றும் இறப்பாரோ

என்பர் எம்பெருமான்

இவ்வாறு கம்பராமாயணத்தை, அதன் இரசனை குன்றாமல் மூன்றில் ஒன்றாய்க் சுருக்கி, கற்றாரும் கல்லாதாரும் போற்றும் படி இசைத் தமிழ்க் காப்பியமாய்ப் புதுமையாய்ப் படைத்தார் எம்பெருமான். இது போலும் இலக்கிய வகை இவருக்கு முன்னும் இல்லை, பின்னும் உண்டாக வில்லை. அருணாசலக் கவிராயரின் இராம நாடகம், மராடபாணியின் கீர்த்தனை வடிவிலே அமைந்தது.

அடிக் குறிப்பு :

1. திருச்செங்கோட்டுக்கும் சங்ககிரிக்கும் இடையிலே சிற்றூராய் இன்று காட்சி தரும் போரூர், கி. பி. 17-ம் நூற்றாண்டில், எழுகதை நாட்டின் தலைமை இடமாய், 60 தண்டிகை 70 காங்கேயர்க்கு உரிய பெரு நகராய் பிரசித்தி பெற்றிருந்தது. இதிலே ஆளுநராய் இருந்த காங்கேயர், பாண்டியரது ஆகவராமன் என்ற விருதுப் பெயருடன் வேப்பந்தாரும் மீனக் கொடியும் கொண்டு விளங்கினார். திருச்செங்கோட்டிலே இவர்கள் செய்த திருப்பணி குறிப் பிடத்தக்கது. இவர்களிலே ஒருவர்தான் 'உரிச் சொல் நிகண்டு' பாடியது.

சீதையின் விடுதலை

டாக்டர் (திருமதி) தேவி ரங்கசாமி, எம்.ஏ., பி.எச்.டி.

'சிறையிருந்தாள் ஏற்றம் கூறும்' இராமாயணத்தில் சிறையிருந்த செல்வியான சீதையின் விடுதலையைப் பாங்குறக் காட்டுகின்றார் கம்பர். சீதை இருந்த சிறைகள் இரண்டு. முதலாவது இராவணனது அகச்சிறை; இரண்டாவது அசோகவனமாகிய புறச்சிறை. ஆம்; இராவணன் அசோக வனத்தில், புறத்தே சீதையைச் சிறை வைக்கும் முன்பே, சூர்ப்பணகை வாயிலாக, சீதையின் அழகைக் கேட்டுத் தன் அகமாகிய சிறையில் வைத்து விட்டான். புறச்சிறையாகிய அசோகவனத்திலிருந்து அவளை விடுவிக்கு முன் அகச்சிறையாகிய இராவணன் மனத்திலிருந்து அவள் விடுதலை பெறவேண்டும். அப்போதுதான் சீதைக்கும் சிறப்பு; இராவணனின் பெருமைக்கும் சிறப்பு.

"இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான்" என ஆரணிய காண்டத்து மாரீசன் வதைப்படலத்தில் சீதையை இராவணன் மனச்சிறை வைத்ததைக் கூறிய கம்பர், யுத்த காண்டத்தில் இராவணன், சீதை மீது கொண்ட காதல் நினைவை, மெல்ல மெல்லத் தனது உள்ளத்திலிருந்து விடுதலை செய்ததைக் காட்டுகின்றார்.

முதல் நிலையில் சீதையை அசோகவனத்தில் சிறை வைத்த இராவணன் அவளையே நினைத்து ஏங்கிக் கொண்டிருக்கின்றான். இராவணனுக்கு உலகக் கவலைகளே இல்லாதபோது, சீதையைப் பற்றிய கவலை மட்டுமே இருந்தது. அடுத்த நிலையில் போர் ஏற்பட அவனது சிந்தனை கலைகின்றது. தன் கவனத்தைப் போரிலும் செலுத்துகின்றான். அப்போது, படைத் தலைவரும், உடன்பிறந்தோரும் சீதையை விட்டுவிடுமாறு கூற 'சீதையை மீட்பதற்காக இந்தப் போர் எனில், போர்த்தொழிலில் பின்னடைய மாட்டேன்' என்று கூறுகின்றான். அதன் பின்னும் 'சீதை, சீதை' என நினைத்தே அவனுயிர் தேய்ந்து கொண்டிருப்பதாகக் கம்பர் குறிப்பிடுவார். இங்ஙனம் சீதையும், போரும் நிறைந்திருந்த அவன் மனத்து, சுக்கிரீவனால் மகுடம் பறிபோனபோது, நாணமும் தோன்றுகின்றது என்பார் கம்பர். முதல் நாள் போரில் இராமனுக்குத் தோற்ற இராவணன், திசை நோக்காது, வழிநோக்காது, மாந்தரையும், மகளிரையும் நோக்காது, தலை குனிந்தபடி அரண்மனைக்குள் நுழைகின்றான். நுழைந்ததும் தன் நிலையை எண்ணி நாணுகின்றான். அதுவும் வானகத்தார், மண்ணகத்தார் எல்லோரும் சிரிப்பரே என்பதைப் பொருட்படுத்தாமல், 'சானகி நகுவள்' என்றே நாணுகின்றான். "சீதைப் பெண் தங்கிய நெஞ்சை நாணம் கைப்பற்றிக்கொண்டது என்றால், காமத்தால் உறங்காது கவலைப்பட்டது போய், மானத்தால் துயில் கொள்ளாது இருந்தான் என்றால் .... அது எவ்வளவு மாற்றம்" என்கிறார் வ. சுப. மாணிக்கம் அவர்கள்.[1]

முதற்போரில் தோல்வியுறுவது வரையிலும் 'சீதையை விட்டுவிடு' என்றால், சினத்தால் பொங்கிக் குமுறுவான் இராவணன். முதல்போர் முடிந்ததும் இராமனின் பேராற்றலை அவன் அறிந்து கொண்டான். ஆகவே அப்பேராற்றலை வெற்றி கொள்ளத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ள அவன் துணிந்து விட்டான். அதனால்தான் 'சீதையை விட்டுவிடு' என்ற கும்பகருணனது கூற்று அவனது மனத்தில் படாமல், 'இராமனை வணங்கி, வீடணனுடன் நட்பு செய்து கொள்' என்ற கூற்றுமட்டுமே அவன் மனத்தில் படுகிறது. ஆகவே அதற்கு மட்டும் விடையாக,

"மானிடர் இருவரை வணங்கி, மற்றும் அக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட்டு, உய்
[தொழில்
ஊனுடை உம்பிக்கும் உனக்குமே கடன்;
யான் அது புரிகிலேன்; எழுகபோக!"[2]

எனச் சுருக்கமாகவும் தெளிவாகவும் தன் கருத்தைக் கூறுகின்றான். 'சீதையை விட்டு விடு' என்ற கும்பகருணனது அந்தக் கருத்திற்கு இதில் விடை இல்லை. 'சீதையுடன் வாழ்வோம்' என்றோ, 'வாழவேண்டும்' என்றோ 'வாழ முடியுமோ' என்றோ இராவணன் இப்போது நினைக்கவில்லை. இப்போது அவன் தன்மானப் பிரச்சனையால் தாக்கப்பட்டிருக்கின்றான்........முதற்போரின் தோல்வியால் விளைந்த அவமானத்தை எவ்வாறு மாற்றிக் கொள்வோம் என்பதில்தான் அவன் சிந்தை முழுதும் இப்போது இருக்கிறது'' என்ற நடராச சர்மாவின் கூற்று இங்கு மிகவும் பொருந்துவதாகும்.[3]

இதேபோன்று இந்திரசித்து, ''சீதையின்பாலுள்ள ஆசையை விடு ; போரைத் தவிர்க்கலாய்''[4] என்னும்போது இராவணன் கூறுவான்:

''விட்டனென், சீதை தன்னை
என்றலும் விண்ணோர் நண்ணி,
கட்டுவது அல்லால், என்னை
யார் எனக் கருதுவாரோ ?''[5]

'சீதையை விட்டவுடன் எனது அச்சமும் எளிமையும் புலப்படும் ஆதலால் இராமனைத் துணையாகப் பெற்ற தேவர்கள் என்னைக் கண்டு அஞ்சி ஓடிய நிலை மாறிவிடும். ஆகவே இறப்பதேயாயினும், சீதையை விடாது பழைய பெருமித நிலையோடு போர் செய்து இறந்துபடுதலே சிறப்பு. யாக்கையை விட்டாலும் சீதையை விடுவதில்லை' என்கின்றான்.

இராவணனது இச்சொற்கள், சீதை மேல் உள்ள காதலைச் சிறிதும் உணர்த்தவில்லை. தன் பெருமையை நிலைநாட்டிக்கொள்ள வேண்டுமென்ற அவனது துடிப்பையே இவை உணர்த்துகின்றன. சீதை மேலுள்ள காமம் மறைந்து அவளைப் பகைப்பொருளாக அவன் நினைப்பதை இக்கருத்து புலப்படுத்துகின்றது. அவள்மேல் கொண்ட ஆசை மறைந்து, புகழ்மேல் இராவணன் கொண்ட வேட்கையே இதனால் வெளிப்படுகின்றது. சீதை காரணமாகப் பலர் அழிந்த பின், சீதையை விட்டுவிடுதல் அவனுக்குப் பழிமையாகும். இதற்கு மாறாகப் போரிட்டு யாக்கையை விடுதலே சிறப்பு என்று கருதுகின்றான். காதலைத் துறந்து, தன் பெருமையையும், புகழையும் நிலைநாட்டிக்கொள்ள இராவணன் நினைத்துக் கொண்டிருக்கும் நேரமிது.

சீதைமேல் கொண்ட காதல் மறைந்ததனை மட்டுமல்லாமல், அவளை வெறுக்கும் இராவணனையும் காட்டுகின்றார் கம்பர். இராவணனின் மைந்தனான அதிகாயனின் மரணச்செய்தி வருகின்றது. அதுகேட்ட இராவணன் மனம்புழுங்கி, மண்ணுலக மக்களையும் விண்ணுலக தேவர்களையும் அழித்தொழிக்க எண்ணுகின்றான். மேலும் 'பெண் எனும் பெயர் எல்லாம் பிளப்பேன்' என்று கூறுகின்றான். தனக்கு நேர்ந்த இத்துணைத் துன்பங்களுக்கும் காரணம் சீதையென்னும் பெண்ணாதலின், பெண் எனும் பெயர்க்குரிய எல்லா உயிர்களையும் வாளினாற் பிளந்து ஒழிக்க நினைக்கின்றான். மகனாகிய அதிகாயனை இழந்ததால் அவன் உள்ளத்தில் ஏற்பட்ட மாற்றம் இது. தன்னருமை மகனாகிய இந்திரசித்து இறந்தது கேட்டு இந்த வெறுப்பு, சீதையைக் கொல்லும் அளவுக்கு வளர்கின்றது.

''இத்துயர் நமர்கட்கு எல்லாம்
பொன்தழைத்தனைய அல்குல்
சீதையால் புகுந்தது' என்ன
'வன்கழைக் கல்லின் நெஞ்சின்
வஞ்சகத்தாளை, வாளால்
கொன்று இழைத்திடுவேன்' ''[6]

என்று விரைகின்றான். மகன்மேல் இராவணன் கொண்டிருந்த அன்பும், பாசமும் மனைவியின் வருத்தமும் அவனது காதல் நினைவை அறவே அழித்து அதற்குக்காரணமான சீதையையும் அழிக்குமளவுக்கு அவனது உள்ளத்தை மாற்றுகின்றன. இது 'சீதை காதலின் பிறந்துள பரிசு' என்று, தான் சீதை மேல் கொண்ட காதலின் தவற்றை முதன்முதலாக உணர்ந்து கொள்கின்றான்.

இறுதியில் போருக்குச் செல்லும் முன், அவனது உரையில் காம உணர்ச்சி சிறிதும் இல்லை. இராமனை வென்று சீதையைத் தானடைவது என்ற எண்ணம் போய், இராமனது வெற்றி அல்லது தனது வெற்றி என்ற நினைவோடு மட்டுமே அவன் போருக்குச் செல்வதை அவனது கூற்றே உணர்த்தும்.[7]

இராவணன் இறந்தபின், மண்டோதரி வாயிலாகவும், அவனது உள்ளத்தில் சீதை யின் நினைவு இல்லாததைக் கம்பர் உணர்த் துவார்:

"வெள்எருக்குஞ் சடைமுடியான் வெற்பு எடுத்த
திருமேனி, மேலும் கீழும்
எள்இருக்கும் இடன் இன்றி, உயிர் இருக்கும்
இடன்நாடி, இழைத்தவாறோ ?
கள்இருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி. உடல் புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி? "[8]

என்று, இறந்து கிடக்கும் இராவணனைத் தழுவி மண்டோதரி கூறுவாள் சூர்ப்பணகை வாயிலாக சீதையின் அழகைக் கேட்டு அகச் சிறையில் இராவணன் வைத்துவிட்டான். புறச்சிறையாகிய அசோகவனத்திலிருந்து அவளை விடுவிக்கு முன், இராவணனது மனச்சிறையிலிருந்து அவள் விடுபட வேண்டும். அப்போதுதான் சீதைக்கும் சிறப்பு; இராவணனது பெருமைக்கும் சிறப்பு. இராமனது வாளிதான் இராவணன் மனச் சிறையிருந்த சீதையை விடுவித்தது என்பர். அது பொருந்துவதன்று. இராமன் தன் வீரத்தால் இராவணனது உயிரைப் போக்கலாம்; அழிக் கலாம். ஆயின் அவனது நினைவுகளை அழிக்கமுடியாது. இராவணனது நினைவு களுக்கு அவன் உள்ளம்தான் காரணம். ஆகவே அவன் நெஞ்சின் நினைவுகளையும் உள்ளத்து உணர்வுகளையும் இராமன் அழிக்க முடியாது. புறச்சிறையில் இருந்து வேண்டுமாயின் சீதையை இராமன் விடுவிக் கலாம். ஆயின் அகச் சிறையில இருந்து சீதையை, இராவணன்தான் விடுவித்து வெளி யேற்ற வேண்டும். இராவணனது உயிரை வெளிக்கொணரவல்லது இராமன் வாளி என்றாலும், இதயத்திலுள்ள நினைவுகளை அவ்வாளி நீக்காது. உயிர்போனால், நினைவு தானாகவே போய்விடும் என்றாலும், உயிர்போகும்முன்பு இராவணன் உள்ளத்தி லிருந்து சீதையின் நினைவு அகன்றால்தான் அவளுக்கும் சிறப்பு; இராவணனுக்குமே சிறப்பு. ஆகவே இராமனது வாளி சீதையைப் புறச் சிறையிலிருந்து மட்டுமே வெளியேற்று கின்றது. அகச்சிறையில் இருந்து அவளைப் பற்றிய நினைவுகளை இராவணனே படிப் படியாக வெளியேற்றுகின்றான். இராமனது வாளி, 'சானகியின் நினைவு உள் இருக்கும்' எனத்தேடிப் பார்க்கிறது. எனினும் சானகி அங்கு இல்லை. இராமன் அவளை மீட்கு முன்பே, அவள் இராவணனது இதயச் சிறை யிலிருந்து விடுபட்டுவிட்டாள்.

முடிவாகப் பார்க்கும்போது, இராவணனது மனத்தில் சிறைவைத்த சீதையை கம்பர் படிப் படியாக விடுவிக்கின்றார். முதல்நிலையில், சீதையை அசோகவனத்தில் சிறைவைத்த இராவணன் அவளையே நினைந்து ஏங்கிக் கொண்டிருக்கின்றான். அடுத்த நிலையில், போர் ஏற்பட்ட பின்பு சீதையின் நினைவும் போரின் நிலையும் மாறிமாறி அவனுள்ளத்தே இடம்பெறுகின்றன. மூன்றாவது நிலையில், முதல்நாள் போரில் இராமனிடம் தனக்கேற் பட்ட தோல்வியை நினைந்து வருந்து கின்றான்; அவ்வருத்தத்தோடு நாணமும் அவன் உள்ளத்தில் இடம்பிடிக்கின்றது. அதோடு அவனைச் சார்ந்தவருக்கு ஏற்பட்ட அழிவுகளையும் அடுத்தடுத்துக் கம்பர் காட்டு கின்றார். கிங்கரர்வதை, சம்புமாலி வதை, பஞ்சசேனாபதிகள் வதை, அக்க குமாரன் வதை, மகாக்கண்ணன் வதை, இந்திரசித்து வதை என இராவணன் பக்கத்தார் வதை பட்ட படலங்களைக் கம்பர் காட்டுகின்றார். இவை தவிர, பொழில் இறுத்தபடலம், இலங்கை எரியூட்டு படலம், மகுடபங்கப் படலம், முதற்போர்ப் படலம் என்ற அவனது பெருமைக்கு இழுக்குத் தரும் படலங்களையும் கம்பர் கூறுகின்றார். இவ்வழிவுப்படலங்கள் யாவும், இராவணன் உள்ளத்தே மாறுதலை

ஏற்படுத்துகின்றன. இவ்வழிவுகள் யாவும் சீதையால் வந்ததென இராவணன் உணரும் போது, அவன் அவளை வெறுக்கின்றான். இவ்வழிவுகளை எண்ணும்போதும், நாணமும் மானமும் சோகமும் அவன் நெஞ்சைத் தாக்க காமச்சிந்தனை மறைந்து போரெண்ணமே அவன் மனத்தில் நிறைகின்றது இறுதியில், தன் வீரத்திற்கும் பெருமைக்கும் இழுக்கு நேரிடுமென்று நினைத்தே அவன் சீதையை விட மறுக்கின்றான். தம்பியின் இழப்பும் மகனது அழிவும், மனைவியின் வருத்தமும், இராவணன் உள்ளத்தை, சீதையைக் கொல்லுமளவுக்கு மாற்றிவிடுகின்றன. சீதை மேல் இராவணன் கொண்ட காதல் அழிய அவனுக்கு அவள் பகைப்பொருளாக மாறுகின்றாள். அதனால் தான் அவன் தன் பெருமையையும் வீரத்தையும் மட்டும் மனத்திலிருத்திப் போருக்குச் செல்கின்றான். இங்ஙனம் இராவணன் சீதையைத் தன் உள்ளத்திலிருந்து விடுவித்ததால், சீதையின் நிலை மட்டுமன்றி, இராவணன் நிலையும் சிறப்புப் பெறுகின்றது. தன் இறுதி நிலையில், சீதையை, மனத்திலிருந்து அகற்றித் தன்னைத் தூய்மை செய்து கொண்டதன் மூலம், இழந்த தன் பெருமையையும் புகழையும் திரும்பப் பெறுகின்றான் இராவணேசுவரன்.

அடிக்குறிப்புகள் :

1. வ. சுப. மாணிக்கம், "கம்பர்", ப. 99.
2. யுத்த காண்டம், கும்பகருணன் வதைப் படலம், 7490.
3. தா. நடராச சர்மா, "கும்பகருணன்", ப. 72.
4. யுத்த காண்டம், இந்திரசித்து வதைப் படலம், 92`7.
5. மேலது, 9262.
6. யுத்த காண்டம், இராவணன் சோகப் படலம், 9376.
7. "மன்றல் அம் குழல் சனகி தன்
   மலர்க்கையால் வயிறு
   கொன்று, அலந்தலைக் கொடு நெடுந்
   துயரிடைக் குளித்தல் ;
   அன்று இது என்றிடின், மயன்மகள்
   அத்தொழில் உறுதல் ;
   இன்று, இரண்டின் ஒன்று ஆக்குவேன்
   தலைப்படின் "—
   — யுத்த காண்டம், இராவணன் தேரேறு படலம், 9808.
8. யுத்த காண்டம், இராவணன் வதைப் படலம், 10,031.

கம்பநாட்டாழ்வார் கண்ட ஆழ்வார்கள்

ஸ்ரீராமகதாரத்ன வே. தியாகராஜன்

செவிக்குத் தேனென இராகவன் புகழினைத் திருத்தும் கவிக்கு நாயகனான கம்பன் தனது இராமாவதாரக் கதையில் தனது குல தெய்வமான நரசிம்ம மூர்த்தியின் அவதாரத்தையும், வீடணன் அடைக்கலப் பகுதியில் சேர்த்துப்பாடியருளினான். இராம காவிய மாளிகைக்கு அவயவ சம்பந்தமில்லாது மேலே பட்டொளி வீசிப்பறக்கும் ஒரு கொடி போன்றது இரணியன் வதைப் படலமென்பர் அறிஞர்.

இராவணனது நோக்கில் "பிரகலாதன் தந்தைக்குத்துரோகி, வீடணனும் தமையனுக் குத் துரோகி" என்பது தமது தந்தையையும் தமையனையும் இருவரும் ஒரு வார்த்தை கூட வெறுத்துப் பேசவில்லை என்பர். அன்பர்கள் சிந்திக்க வேண்டிய ஒரு முக்கியமான செய்தி பிரகலாதன் தந்தையை வெறுத்துப் பேச வில்லை என்பது மட்டுமல்ல. தெய்வத்தின் பெருமையை எடுத்துக் கூறியதற்காக, அதைக் குற்றமாகக் கொண்ட தந்தை இரணியனால் பலமுறைகள் கொடுமையான தண்டனைக்கு ஆளானவன். அப்போதும் அவன் தந்தையை ஏசவில்லை. இறைவனது நாமத்தைக் கூறி, அந்த அருளில் உயர்தப்பினான். சிறு குழந்தை யான பிரகலாதன், தன் தந்தையைப் பிரிந்து வேறெங்கும் செல்ல இயலவில்லை. தெய்வ நம்பிக்கை என்பது அவரவர் சொந்தக் கருத் தையும் விருப்பத்தையும் பொறுத்தது. தனது அவநம்பிக்கை காரணமாக தெய்வ நிந்தனை செய்வதும் அடியார்களுக்கு அல்லல் செய் வதும் மன்னிக்க முடியாத குற்றமாகும். எனவே இரணியன் தண்டிக்கப்பட்டான்.

வீடணனின் நிலையும் இத்தகையதே. எனினும் சிறிது வேறுபாடுள்ள நிலை. வீடணன் வயது முதிர்ந்து பக்குவ நிலை பெற்றவன். இராவணன் மீது அன்பும் மரியாதையும் உள்ளவன். அண்ணன் தான் வகித்துவரும் உயர்ந்த நிலையிலிருந்து கீழே விழுந்து விடப் போகிறானே என்ற கவலை யில், பிறன் மனையை விடுதலை செய்து விட்டால் மேலும் நன்கு வாழத் தன் அண்ண னுக்கு வாய்ப்பு உண்டு என்பதை அறிந்து, அவ்வழியில் சிறிதும் தயக்கமின்றி அண்ண னுக்கு நன்மைதரக் கூடிய புத்திமதியை இடித்துக் கூறிய நேர்மையாளன்.

"இலங்கையை அனுமான் எரிக்கவில்லை. சீதையின் கற்பான கனல் இலங்கையை எரித்து விட்டது. பிறபெண்டிரை விரும்புவது என்பது இராவணனுடைய இயற்கையான பழக்கம், வேதவதி என்ற பெண்ணை இராவணன் தீண்ட முயன்று அவள் தீக்குளித் தாள். அவளே சீதையாக வந்தாள். எனவே சீதையை விட்டுவிடுவது நேர்மை." என இராவணனுக்கு எடுத்துக் கூறியவன் வீடணன்.

வீடணனோ பிரகலாதனோ தங்களுக்கு அரசு பதவி வேண்டுமென விரும்பியதாக ஒரு வரிகூடக் கம்பன் எழுதவில்லை. "வெற்றர சான பூமி தாங்கும் பதவியை விரும்பவில்லை. தெள்ளிதின் மேலரசு என்ற தெய்வீகமான முத்தியை விரும்பியே நம்மிடம் வந்துள்ளான் விபீடணன்" என்பது அனுமன் இராமபிரானி டம் கூறிய கருத்து.

"உண்டு உண்டு உறங்கிக் கொண்டே பயனற்ற வாழ்க்கை வாழ்ந்தேன். அண்ணன் தவறிழைத்த போதிலும் அவன் எனக்கு உண விட்டுக் காத்தமையால் என் உடலை அவனுக் காக விடப்போகிறேன்" என்றது கும்பகர்ண னின் நிலை. கும்பகர்ணன் இராவணனுக்குக்

கூறிய அறவுரைகள் வீடணன் கூறியவற்றைக் காட்டிலும் சிறிது கடுமையான நேர்மை யானவை. எனினும் அவன் தன் செஞ் சோற்றுக் கடனைத் தீர்க்க வேண்டுமென்ற உறுதியான எண்ணம் உடையவனானான். அண்ணனும் வாழட்டும். தன் தம்பியும் வாழட்டும். நான் அழிந்து போவதுதான் நேர்மை என எண்ணி, இராவணனுக்கு அறவுரை கூறி, போர்க்களம் புகுந்த போது வீடணன் கும்பகர்ணனிடம் இராமபிரானின் பக்கம் சேர அழைத்தபோது, அண்ணனுக்கு என் கடமையைச் செய்யவேணும் என்று உறுதியுடன் மறுத்தான். அதுமட்டுமல்ல.

வீடணனை ''ஏன் இராமனிடம் சேர்ந் தாய். நீ இராவணன் பக்கம் திரும்பிவந்து விடு'' என அழைத்திருக்கலாமே அவ்வாறு செய்யவில்லை. ''நீ ஏன் இங்கு திரும்பி வந்தாய்? அமுதுண்பவன் நஞ்சுண்பது போன்ற செய்கையோ இது. புலத்தியன் மரபில் நேர்மையான வழியில் சென்றான் ஒருவன் என எண்ணிய என்னை மயங்கி வாயுலர்ந்து போகுமாறு செய்துவிட்டாயே. நீ தரும நாயகனான இராமனையடைந்து விட்டாய் பிறமனை நோக்குவேலை உறவென எண்ணித் திரும்பி வந்தனையா?'' என்றெல்லாம் கும்ப கருணன் வீடணன் செயலைப் பற்றிப் பேசினான். உடம்பிலே ஒரு கட்டி தோன்றி னால் உடல் பூராவும் பரவி விடக்கூடாது என்று அதை அறுத்து எறிவது போல் தவறான செயல் செய்த அண்ணனைவெறுத்து நீக்கிப்பிரிந்து போவது தவிர வழியே இல்லை. எனவே நீயும் இராவணனைவிட்டு வந்து விடு.''

உடலிடைத் தோன்றிற்றொன்றை
அறுத்து அதன் உதிரமுற்றுச்
சுடருறச்சுட்டு வேறோர் மருந்தினால்
துயரம் தீர்வர்
கடலிடைக் கோட்டம் தேய்த்துக் கழிவது
கருமமன்றால்
மடலுடை அலங்கல் மார்ப! மதியுடைய
வர்க்கு மன்னோ!

என வீடணன் கும்பகருணனை அழைத்தான் மறுத்த கும்பகர்ணன் இதற்குப் பதில் கூறும் முறையில் வீடணனை ''உலைவிலாத் தருமம் பூண்டாய்!'' என விளித்து அவன் செய்த செயல் நேர்மையானதே எனக்கூறினான்' எல்லாமறிந்த நீ செய்தது தக்க செய்கையே! எம்மைப்பார்த்து இரக்கப்படாதே'' எனவும் கூறினான். ''சேகற உணர்ந்தோர் நின்னின் யாருளார்? வருத்தல் செய்யாது: எம்மை நோக்கி இரங்கலை' என்றும் உள்ளாய்!'. என்பது கும்பகருணன் வாக்கு.

போர்க்களத்தில் இந்திரசித்தும் வீடண னும் சந்தித்த போது ''உனக்கு ஏது மானம்! இராவணன் இராமனம்பால் விழுந்தால் அழுவாயோ! அகமகிழ்வாயோ! உன் அண்ணனைக் கொன்ற இராமனைத் தொழு வாயோ'' என்றெல்லாம் கேட்க, வீடணன் கூறும் மறுமொழியிலிருந்து அவனது உண்மை நிலையைத் தெளிந்து அறிய முடிகின்றது.

''அறத்தையே துணையாகக் கொண் டேன். வாய்மையை மீறவில்லை. பொய் மையை விட்டேன். இலங்கை வேந்தன் தவறான செய்கை செய்ததும் அவனது உடன் பிறப்பு என்ற நிலையிலிருந்து நீங்கினேன். நான் மதுவருந்தவில்லை. பொய் பேசவில்லை எவரையும் நிர்ப்பந்தம் செய்யவில்லை. வஞ்சிக்கவில்லை. என்மீது எவரும் குற்றம் கூறவில்லை. பிற பெண்டிரை விரும்பின பாத கரைத்துறப்பது பிழையா? உலகிற்கு அன்னை போன்றவளைத் துன்புறுத்த வேண்டாம் என நல்வார்த்தை கூறினேன். உன் தந்தை என்மீது சினந்து வெளியேற்றினான். இதனால் நரகமா கிடைக்கும். அறத்தினைப் பாவம் வெல்லாது என அறிந்து இராமபிரானை அடைந்தேன். இதற்காகப் பழி வந்தால் வரட்டும்'' என்று பதிலிறுத்தான்.

* * *

வீடணன் துரோகி என்பது உண்மை யானால் இராவணன் இறந்தது கண்டுகளித்து

மகிழ்ந்திருக்கவேண்டும். ஆனால் உடன் பிறப்பு என்ற பாசத்தில் தூண்டப்பெற்று, நஞ்சு உண்டவரைத்தான் அழிக்கும். கண்ணால் கண்டவரை அழிக்குமா? நான் சொன்ன நல்ல வார்த்தைகளை உயிர் நீங்கும் போதாவது புரிந்து கொண்டாயா? பிறன்மனையை விரும்புவது பேராசை என்றேன். என் மீது கொண்ட கோபத்தை நீக்கி உண்மையை உணர்ந்து கொண்டாயா? நம் ஊரில் தீக்குளித்த வேதவதியே சீதையாக வந்தாள் என்றேனே! புகழையும் கலையையும் வெற்றிமகளையும் தழுவிய நீ மாற்றான் மனைவியைக் கண்டு ஆசை கொண்ட ஒரு குற்றத்திற்காக மடிந்து (பூமியிலே விழுந்து பிணமாகக் கிடக்கின்றாயே) பார்மகளைத் தழுவினாயோ?'' என்று அலறினான்.

வீடணன் துரோகியாக இருப்பின் ''அண்ணா! உனக்குத் துரோகம் நினைத்து உன் எதிரியை அடைந்தேனே'' என்று உணர்ச்சி வசப்பட்டுக்கூறியிருப்பான். மரண மடைந்தவரைக் குற்றம் கூறக்கூடாது. மரண மடைந்தவரை மன்னிக்க வேண்டும் என்பது மரபு. ஆனால் இராவணன் செய்த குற்றம் அவன் மரணம் அடைந்த பின்பு கூட. மாளா மனத்தினால் கூட, மன்னிக்க முடியாததா யிற்று.

பிறன் மனையைக் கண்டு ஆசைப்படாதே என இராவணனுக்கு விபீடணன் மாத்திரமா கூறினான்?

இராவணனுடைய பாட்டான மாலிய வான் எத்தனை தடவை கூறினான். இராவணன் அலட்சியம் செய்தான்.

கும்பகர்ணனும் (தையலை விட்டு அவன் சரணம் தாழ்ந்து உன் தம்பியோடுஅளவளாவு தல் உய்திறன்) ''சீதையை விட்டு இராமனை அடைக்கலம் புகுந்து உன் தம்பியான வீடணனுடன் உறவு கொள்வதுதான் வழி'' என்றான்.

இந்திரசித்தன் கடைசியாகப் போருக்குப் புறப்படும்போது, இராம. இலக்குவர்களின் வீரத்தைப் புகழ்ந்து பேசி ''நான் பயந்தவன் என எண்ணி விடாதீர். சீதையின் மீதுள்ள ஆசையை விட்டுவிட்டால் இராம இலக்குவர் திரும்பிச் சென்று விடுவர். நமது கவலைகளும் நீங்கும். உன் மகன் என்ற முறையில் உன் மீதுள்ள அன்பினால் தான் இவ்வளவும் கூறுகிறேன்'' என்றான்.

ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை:
ஆசைதான் அச்
சீதைபால் விடுதியாகில் அனையவர்
சீற்றம் தீர்வர்:
போதலும் புரிவர்: செய்த தீமையும்
பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான்''

ஆணவ உருவான இராவணன் அதை ஏற்கவில்லை. ''பேதைமை உரைத்தாய் மைந்தா! சீதையை விடுவதுண்டோ இருபது திண் தோள் உண்டால்! என்னையே நோக்கி நான் இந்நெடும் பகை தேடிக் கொண்டேன்! இன்றுளார் நாளைமாள்வர். புகழுக்கு இறுதி உண்டோ'' என்றெல்லாம் பேசினான்.

சீதையைக் கவருவதற்காக மாரீசனை ஏவியபோது மன்னா! நீ உன் வாழ்வை முடித்தாய் மதியற்றாய் — என்றும் சீதை உருவோ நிருதர் தீவினையதன்றோ—(அரக்கர் செய்த பாவம் அவரை அழிக்க சீதையின் உருவம் கொண்டுவந்துள்ளது'' என்றெல்லாம் புத்திமதி கூறியதைக் கேட்டிருந்தால் தவறே நடந்திருக்காது.

போர்க்களத்தில் இராமனுடன் போர் புரிந்தபோது ''இவன் சிவனோ, நான் முகனோ திருமாலோ'' என்றெல்லாம் நினைத்து, ஆணவ முனைப்பினால் ''யாரேனுந்தானாகுக யான்என் பேராண்மை காட்டுவேன்'' எனக்கூறி அதன் காரணமாக அழிந்தான்.

இரணியனோ இராவணனோ கடைசி வரைத் தமக்குக் கிடைத்த நல்ல சூழ் நிலைகளைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நரசிம்ம உருவாகத் தோன்றியபோது ''இப்போதாவது இவரை

வணங்கிவிடு. உன் குற்றங்களைப் பொறுப்பான்''

வன்றொழில் ஆழிவேந்தை வணங்குதி
வணங்கவே உன்
புன் தொழில் பொறுக்கும் என்றான்.

இரணியனும் ஆணவத்துடன் ''இவனையா வணங்குவேன் தூணில் தோன்றிய இவனைக் கொன்று இவனை வணங்கிய உன்னையும் கொன்று இருவரையும் கொன்ற வாளினையே வணங்குவேன்'' என்றான்.

ஆணவம் அழிந்தது.

வீடணனும் பிரகலாதனும் அரசுக்கு ஆசை கொள்ளவில்லை. இராவணனும் இரணியனும் அழிந்தபின் அவ்வரசுகளை ஏற்க வேண்டும். காக்க வேண்டும் என்ற கடமையுணர்ச்சியிலேயே அரசை ஏற்றனர் என்பது நினைவிற் கொள்ள வேண்டிய தொன்றாகும்.

இராம—ராவணர்கள் போர் தருமத்திற்கும் அதர்மத்திற்கும் ஏற்பட்ட போர். நல்லவர்கள் அறத்தின் பக்கமே சேருவர் என்பது இயற்கை தருமம். வெற்றிபெற அதருமம் அழிய உதவ வேண்டியது எவருக்கும் பொதுவான கடமை. அதனாலேயே வீடணன் இரவணனை அழிப்பதற்கான இரகசியங்களை இராமபிரானுக்குத் தெரிவித்தான். அத்தகைய கடமையைச்செய்தவீடணனைத்துரோகி என அழைப்பது பொருந்தாது.

தருமம் வாழ்வதற்காக தங்கள் நெருங்கிய உறவினரையும் கைவிட்ட பிரகலாதனையும் வீடணனையும் என்றும் வாழக் கூடியவர்கள் என அடியார்களின் உலகம் வணங்கி வழிபட்டு வருகிறது. கம்பநாட்டாழ்வார் இருவரையும் ஆழ்வார்களாகக்கி விட்டார்!

இறைவனது நற்குணங்கள் கருணையாகிய கடலில் மூழ்கித் திளைத்தவர்கள் ஆழ்வார்கள் என பக்தருலகம் போற்றிப் பேசியது. நற்குணக்கடல் ஆடுதல் நன்றரோ எனக் கூறிய கம்பன் வான்மீகரிடமிருந்து கதையை எடுத்துக் கொண்டு, ஆழ்வாராதிகளின் தேனினுமினிய வாக்குகளுடன் சேர்த்துப் படைத்த பேரிலக்கியமான அவனது இராமாயணத்தைப் படித்து இன்புற்று அவனையே கம்ப நாட்டாழ்வார் எனத்தெய்வீக நிலைக்கு உயர்த்தி வணங்கியது.

ஆழ்வார்களின் வாக்கின் தன்மையறிந்து தானே ஆழ்வாராக மாறிய கவிச்சக்கரவர்த்தி நமக்குப் பிரகலாதாழ்வார்—விபீஷணாழ்வார் இருவரையும் அறிமுகப்படுத்தினான். இதற்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்?

கம்பன் புகழ் ஓங்குக—கன்னித்தமிழ் வாழ்க.

சீதை சிறைப்பட்டாளா - புகுந்தாளா?

கம்பராமாயண திலகம்

திரு. கி. பக்ஷிராஜன்

கம்பரது இராம காதையில் திருவவதாரப் பகுதியில் நாம் காண்பன இவைதான். தேவர்கள் பரமனை அவனது 'வியூக' (பாற்கடலில் பள்ளி கொண்ட) நிலையில் பிரார்த்திக்க பரந்தாமன் திருவொடும் மருவி ஓர் செம்பொற் குன்றின் மேல் வருவ போல் கலுழன் மேல் வந்து தோன்றுகிறான். தேவர்கள் விழுந்து வணங்குகிறார்கள். பரமன் கலுழன் தோளி நின்று இறங்கி ஆஸ்தான மண்டபத்துட் சென்று ஆண்டிருந்த பொன்னரி சுமந்த பீடத்து அமர்கிறான், தேவர்கள் ஒவ்வொருவராகத் தாம் இராவணனால் அடைந்துள்ள பரிதாப நிலையைக்கூறத்தொடங்குகிறார்கள். அவர்கள் அனைவரையும் கையமர்த்தி, சிவபெருமான் கேள்விக்கிடமின்றி

"எங்கள் நீள்வரங்களால்
அரக்கராயுளோர்
பொங்கு மூவுலகையும் புடைத்தழித்தனர்
செங்கண் நாயக! இனித் தீர்த்தி
அல்லையேல்
துங்குவர் உலகையோர் நொடியில்"

என்று விண்ணப்பிக்கிறார். பரமன் தானும் தன் பாயலும் திருவாழி திருச்சங்கும் தயரதன் மதலைகளாக அவதரித்து அரக்கன் தன் 'தலையறுத்து இடர் தணிப்பன்' என வாக்களித்து, தேவர்களை நோக்கி நீங்கள் முன் போய் பூமியில் வானரங்களாகக் காடுகளிலும் மலைகளிலும் அவதரித்திருங்கள் என்று ஆணையிட்டு, கருடன் மேல் அமர்ந்து செல்கிறான். தேவர்கள் தாம் இன்னின்னபடி அவதரிப்பதாக வாக்களித்துக் கொள்கின்றனர். இவ்வளவே நாம் அங்கு காண்பது.

பரமன் கூடவே வீற்றிருந்த சிதை தானும் அவதரிப்பதாகக் கூறவில்லை. பரமனும் பரயலையும் சங்கு சக்கரங்களையும் மட்டும் கூறினானேயன்றி அருகிருந்த சிதையைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆனால் நாம் காண்பதென்ன? சீதையும் அவதரிக்கிறாள். ஆனால் இராமனைப் போல் யோனிப் பிறப்பாக அல்ல ஏன்? எப்போது தானும் அவதரிக்க 'லக்ஷ்மி' தீர்மானிக்கிறாள் என்பதை வெளிப்படையாகக்கூறவில்லை கம்பர். அவர் கையாளும் உத்திகள் ஒன்றின் மூலம் பரமன் இராமனாக அவதரித்த பின் சிதை தானும் அவதரிக்க முடிவு செய்த நிகழ்ச்சியொன்றை நாமே ஊகித்தறிய விட்டு விடுகிறார். இராமன் கானம் செல்லப் போவதைச் சீதையிடம் கூறும் பகுதியில் வரும் பாடல் ஒன்றில் கம்பரின் உத்தியைக் காண்கிறோம். பாடல் இது.

"துறந்து பேபம் எனச் சொற்ற
சொல்தேறுமோ
இறைந்த பாற்கடல் சேக்கையிடன் ஒரீஇ
அறம் திறம்புமென்று ஐயன் அயோத்தியில்
பிறந்த பின்பும் பிரியலள் ஆயினாள்"

பாடலின் கடைசி இரண்டடிகள் இராமன் அவதரித்த பின் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றில் தான் இம்முடிவு ஏற்பட்டிருக்க வேண்டும் என்பதைத்தானே காட்டுகிறது. அடியேனது ஊகம் இது:-

இருபுறம் ஓங்கிய இரு குன்றுகளின் இடையே ஒரு பொய்கை. பொய்கை மத்தியில் ஒரு பெரிய மலர்ந்த தாமரை. தாமரைப் பொகுட்டின் மேல் திருமகள் வீற்றிருக்கிறாள். அவள் உள்ளம் இராமனாக அவதரித்துள்ள தன் நாயகன் நினைவாகவே இருக்கிறது. திடீரென்று பொய்கைக் கரையில் ஒரு சல

சலப்பு. திருமகள் திருக்கண்கள் மலர்கின்றன. கரையில் இந்திராணி தலைமையில் தேவமாதர்கள் அவளை வணங்கி நிற்கின்றனர். திருமகள் வியப்புடன் இந்திராணியை நோக்கி,

"என்ன இந்திராணி! இப்படிக் கூட்டமாக வந்திருக்கிறாய். எங்கே, ஊர்வசி மேனகை முதலியோரைக் காணோம்? என்ன காரியம்? சொல்லு."

இந்திராணி :- தாயே! என்னவென்று சொல்வேன்? தாங்களே கேட்டீர்கள் "மேனகை முதலியோர் எங்கே? என்று அந்த மகாபாவி இராவணன் தான் எல்லாத் தேவர்களையும் அடிமை யாக்கியுள்ளானே. ஊர்வசி அச்சண்டாளன் போமிடமெல்லாம் அவன் உடைவாள் ஏந்திச் செல்கிறாள். மேனகை தாம்பூலம் மடித்துக்கொடுத்துக் கொண்டிருக்கிறாள். திலோத்தமை — ஐயோ பாவம்! அவள் செருப்பைச் சுமக்கிறாள். மற்ற ஆணும் பெண்ணும் அவனுக்குக்கூலி வேலை செய்கிறார்கள். என்றுதான் விடியுமோ?

திருமகள் : ஏன் கவலைப்படுகிறாய் இந்திராணி. இவர்தான் அவ்வரக்கர்களைத் தொலைக்க வென்றே நான்கு வருடங்களுக்கு முன் அவதாரம் செய்திருக்கிறாரே. எல்லாம் நல்லபடியாகும், கவலை விடு.

இந்திராணி : ஆமாம் நீங்கள் சொல்லி விட்டீர்கள். ஆனால் உங்களவர் மனிதனாக வல்லவா பிறந்திருக்கிறார். உலகமாயை அவரையும் ஓரளவு பற்றத்தானே செய்யும். அவரோ எடுத்த பிறவியிலேயே மூழ்கிவிடுபவராயிற்றே. அதுதான் தேவி! எங்கள் பயம். ஒரு வேளை அவதரித்த காரணத்தை மறந்து விட்டால்?

திருமகள் :—(சற்றுச் சிந்தனையில் ஆழ்கிறாள்) தெளிந்தவள்.

இந்திராணி! உன் பயம் நியாயமானதுதான். நீ வருந்தாதே எல்லாம் நான்பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் தைரியமாய்ப் போய் வாருங்கள்.

இந்திராணி :—தேவி! தங்கள் வாக்கு எங்களுக்குத் தேறுதல் அளிக்கிறது; தங்களை நம்பித்தான் வந்தோம். தங்களையே நம்பி இருக்கிறோம். (வணங்கிச் செல்கிறார்கள்).

(திருமகள் சிந்தையில் ஆழ்கிறாள்)

ம், ம் இந்திராணி பயந்தது. தவறல்லவே. பிறந்ததோ சக்கரவர்த்தி திருமகனாக. தந்தை அறுபதினாயிரமாண்டுக்கிழவர். அவருக்குப் பின் இவர்தானே சக்கரவர்த்தியாகவேண்டும், அரசுப் பொறுப் பென்ன இலேசானதா? அந்நிலையில் மறதி ஏற்படுவதும் சகஜம் தானே? அப்படி ஏற்பட்டால் தேவர்கள் கதி?....சரி! அது ஒரு புறம் இருக்கட்டும் 'என்னைத்தான் நமபியிருக்கிறோம் தாயே' என்றாளே இந்திராணி. உலகின் தந்தையாம் நிலையில் அவர் அவதாரம் செய்து விட்டார். தாய் என்ற நிலையில் நான் செய்தது என்ன? எல்லாத் தேவர்களும் தாங்கள் இன்னின்னபடி அவதரிக்கப் போவதாகக் கூறினார்களே. நானும் புறப்படும்போது கேட்கத்தானே செய்தேன். நான் ஏதாவது செய்வதாகக் கூற நினைத்தேனா? இல்லையே. பெரிய தவறல்லவா. குழந்தை கிணற்றில் விழுந்தால் தாய் தானும் குதித்து அதைக் காப்பாற்ற வேண்டாமா? தேவமாதர் சிறைப்பட்டு அவதியுற்றால் தாயான நானும் அச்சிறையில் வீழ்ந்தாவது காக்க வேண்டியது தானே என் கடமை? ...அப்படியாயின் நானும் சென்று அவரது காரியத்துக்குக் கைகொடுக்க வேண்டியதுதான்....ஆனால் அவரைப் போல் ஒருவருக்கும் ஒருத்திக்கும் மகளாகப் பிறக்கக்கூடாது, பிறந்தால், அவரைப்பற்றிப் பயந்ததுபோல் நானும் உலக மாயையில் சிக்கிவந்த காரியம் மறந்து விட்டால் என்னசெய்வது? (யோசிக்கிறாள்.)

ஆ! இதுதான் சரி! ஜனகரும் அவர் மனைவி சுநயனையும் குழந்தையில்லை என்று தவித்து இஷ்டியாகம் செய்ய நாள் வைத்துள்ளார்கள். யாககாரியம் தொடங்கி யாகசாலை உழும்சாலின் கீழ் குழந்தையாகத் தோன்றி விடுகிறேன். என்னவர் என் கணவராக வேண்டிய வழியை விதி பார்த்துக் கொள்ளும்.

பிராண நாதா! கண்ணை மூடுகிறாள். தாமரை வெறிச் சோடுகிறது

சரி! ''நீ காட்டிய பாடலில் இத்தனை விஷயப் பொருளும் அடங்கியுள்ளது என எப்படிக் கூறுகிறாய்'' என்று நீங்கள் கேட்பது காதில் விழுகிறது. பாட்டின் 3,4வது அடிகளை ''ஐயன் அயோத்தியில் பிறந்த பின்பும் அறம் திறம்பும் என்று பிரியலளாயினான்'' என்று அன்வயப்படுத்திப் பார்த்தால் விளங்கும். நிகழ்ச்சி இராமன் பிறந்த பின்பு என்பது பதத்திலிருந்தே விளங்கும். தாய் என்ற நிலையில் தான் ஒன்றும் செய்யவில்லை என்ற உணர்வு வந்ததால் தாய் தானும் உலகில் அவதரிக்கத் தீர்மரிக்கிறாள். நாயகன் யோனிப் பிறப்பில் மனிதனாகத் தோன்றியதால் உலக மாயையால் மறதி ஏற்படலாம் என்ற உண்மையை இந்திராணி உணர்த்தியதாலும், தனக்கும் ஐயம் ஏற்பட்டதாலேயே அவ்விதம் மறதி ஏற்பட்டு விடாத வகையில் அவதரிக்க வேண்டுமென்ற தீர்மானம் ஏற்படுகிறது. பூ தேவியைத் துணை கொள்கிறாள். உழசாலடியில் ஒரு பேழையுள் ஒரு பெண் குழவியாகத் தோன்றுகிறாள்.

ஜனகன் புதல்வியாக கலப்பை நுனியில் தோன்றியதால் சீதை என்ற பெயரோடு வளர்கிறாள். மகளின் வளர்ச்சியில் அவன் அழகும் வலியும் ஜனகன் உள்ளத்தில் தக்க மருமகன் கிடைக்க வேண்டுமே என்ற கவலை தோன்றுகிறது. சீதைக்கு ஒருவனுக்கு மனைவியாகத் தக்க பருவம் வந்தது. ஜனகன் ஆசாரியன் சதானந்தரிடம் தன் கவலையை வெளியிட்டு யோசனை கேட்கிறான். சதானந்தர் கண்ணை மூடி ஆலோசித்து ''ஜனகா உன்பால் இரண்டு தெய்விக விளைவு உள்ளன. சீதை இஷ்டியாகத்தில் கிடைத்தவளல்ல. முன்பே கிடைத்து விட்டாள். உன்னிடம் நீ வேண்டாதபடியே சிவதனுசு வந்தடைந்துள்ளது. ஏதோ காரணமின்றி இவ்விரண்டும் நிகழவில்லை. ஆகவே இரண்டையும்முடிபோடு. சிவதனுசைவளைத்து நாண் ஏற்றுபவனே சீதையை அடைவான் என்று பணயம்வை எக்காரணத்துக்காக விதி இவ்விரு நிகழ்ச்சிகளையும் வகுத்ததோ அந்த விதியே காரணத்தை நிறைவேற்றும். வேறொன்றும் யோசியாதே. எல்லாம் நலமாகும்'' என்று வழி காட்டுகிறார்.

திருமண வேள்வி தொடங்குகிறது. ஆனால் வில் நாண் ஒரு வாராலும் ஏற்றப்படவில்லை. ''என்றும் இனி மணமும் இலை'' என்ற கவலையில் ஆழ்கின்றனர் சனகனும் சதானந்தரும். ஆனால் இராமாவதாரகாரியம் நிறைவேற வழிவருக்கும் விதி தூங்குமா?

தாடகை வதத்தில் அவதார காரியத்துக்குக் கால் கோள் நிகழ்கிறது. விசுவாமித்திரர் வேள்வி முற்றுகிறது. முக்காலமும் உணரும் விசுவாமித்திரரை விதி இயக்குகிறது. ''இராமா! பெரிய காரியம் உளது. அது முடிப்பது. பின்னர் இப்போது சனகன் நடத்தும் திருமண வேள்வி காணச் செல்வோம்'' என்று இராம இலக்குவர்களை மிதிலைக்கு அழைத்துச் செல்கிறார்.

மிதிலை வீதியில் ஒவ்வொரு காட்சியாக அவ்விளைஞர்களுக்குக் காட்டிச் சென்றவர், சீதை அன்னம் ஆடுமுன் துறையில் நின்றதைக் கண்டு அதனருகில் அவர்களை நிற்கவைக்கிறார். அண்ணலும் நோக்க, அவளும் நோக்க இருவரும் முறுவல் மூலம் ஒருவரை ஒருவர் அவர்கள் பரத்வ நிலையில் அறிந்து கொள்கிறார்கள். மனித நிலையில் காதற் குறிப்பாகும் முறுவல் இங்கு இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்து கொள்ளப் பயன்படுகிறது. ''பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?'' என்பது கவியின் வாக்கு.

இருவரும் தங்கள் முதல் நிலையில் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டாலும் அவதார நிலை மானிடராகவே இயங்குகின்றனர். ராமனுக்கு அரசபிடேகம் என்று கேள்வியுறும் சீதை தன் நாயகன்

''அரசுவீற்றிருந்தாளவும் ஆய்மணிப்
புரசையானையில் வீதியில் போகவும்
விரசுகோலங்கள் காணவும்''

மிகவும் ஆசையோடுதான் இருந்தாள். ஆனால் விதியின் விளைவாகிய அபிடேகத் தடையை இராமன் சீதையிடம் கூற வந்தபோது தன் கணவன் தவறு ஏதேனு முண்டோ, அன்றித் தயரதனுக்குச் சரீர நிலையில் கோளாறோ என்ற முறையில்தான் அவள்

"பொன்னையுற்ற பொலங்கழலோய்புகல்
மன்னையுற்ற துண்டோ? மற்றில்
வன்றுயர்
என்னையுற்றது இயம்பு"

என்று நடுக்கத்தோடு கேட்கிறாள். நாயகன் 'பரதன் முடிசூடுகிறான் நான் தாய் தந்தை இருவரது ஆணையையும் ஏற்றுக் கொண் டேன். நான் கருவி மாமழைக் கற்றடம் கண்டு வருவல், ஈண்டு வருந்தலை நீ" என்று கூறும் போது கற்றடம் கண்டு யான் வருவல்' என்னும் வரை கேட்டுக் கொண்டிருந்த மானிடச் சீதை "ஈண்டு வருந்தலை நீ என்று அவன் கூறியதுகேட்டலும் இலக்குமியாக அவள் உள்ளம் மாறுகிறது. கோலங்கள் காண முடியாது போயிற்றே என்றவரக்கூடிய கவலை பறந்தோடி விடுகிறது. அவதார காரியத்தை நிறைவேற்ற அவனுக்குத் துணையாக இருப்பதல்லவா தடைபடுகிறது என்றபதற்றம் ஏற்படுகிறது.

"நாயகன் வனம் நண்ணலுற்றான்
என்றும்
மேயமண்ணிழந்தான் என்றும் விம்மலள்
நீவருந்தலை நீங்குவென் யான் என்ற
தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்"

அவனைப்பிரியாது அவன் அருகிலேயே இருந்து அறம் திறம்பாமல் காக்கத் தோன்றிய வள் தேம்புகிறாள். நாயகன் பிரிவுக்கு வருந்தும் மற்றமானிடப்பெண் போலவே முதலில் செயல் படுகிறாள். கொஞ்சமும் பரிவில்லாமல்என்னிடம் எவ்விதப்பாசமுமின்றிக் கண்ணீர்க் கடலில் தள்ளிவிட்டுச் செல்கிறேன் என்கிறீர்களே உங்கள் பிரிவைக் காட்டிலுமா காடுசுடும் என்றெல்லாம் படபடவே இராமன் என்ன செய்வது என்று தெரியாமல் கண்மூடிச் சிந்தனையில் ஆழ்கிறான் சீதை இப்போது லக்ஷ்மி, துணிவுடன் செயல்படுகிறாள். நேரே அந்தப்புறம் செல்கிறாள் பட்டுச்சேலைகளைக் களைந்து ஆபரணங்களைநீக்கி நாயகன் தரித் திருந்தது போன்று ஒருமரவுரியை உடலிலே சுற்றுகிறாள். இன்னும் சிந்தனையிலேயேஆழ்ந் திருந்த இராமன் அருகில் செல்கிறாள். வாருங் கள் காடுசெல்வோம் "என்பவள்போல அவள் கையைப்பற்றி நிற்கிறாள். அங்கு கூடியிருந்த அனைவரும் அக்கோலத்தைக்கண்டு கதறி மண் ணில் வீழ்கின்றனர்.

பார்த்த இராமன் 'சரி கூடவரத்திட்ட மிட்டு விட்டாள் என்று தெரிந்து "சீதே! "விளைவுன்னு வாயல்லைபோத அமைந்தனை யா மெனில் எல்லையற்ற இடர்தருவாம் என் கிறான். சீதையின் உள்ளம் சீறுகிறது. கோபக் குரலில் நான்கூடவிருப்ப தொன்று தான் உங் களுக்குத்துயர் என்னைத்துறந்து விட்டால் இன்பம்தான் போலிருக்கிறது? என்று இரைகி றாள் கண்களை மலரவிழித்து நாயகன் கேள்வி வேகத்தையும், அவள் கோலத்தையும். பிடித்த கையின் இறுக்கத்தையும், முகத்தில் ஒளிவி டும் துணிவையும் காண்கிறான். அவள் செய லும் நிலையும் வெறும்மானிட பெண்ணுடைய தல்ல தன்னைத்தன் கடமையை உணர்த்தும் லக்ஷ்மி செயலே என்பதை அவனது பரத்துவ நிலை உணர்கிறது. அந்நிலை வெளிப்பட பேசவும் முடியாது "பிறிதொர் மாற்றம்பெருந் தகை பேசலன் என்கிறார் கம்பர். ஒன்றும் கூறாது சீதையும்தம்பியும் பின்தொடரத்தெரு வில் இறங்குகிறான்.

கம்பராமாயணத்தைப்பற்றிமுக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டியது கவிதன் காப்பியத்துக்கு "இராமாவதாரம்" என்று தான் பெயரிட்டார் என்பதே. பதினாறு குணங்களைக்கூறிஇவையனைத்தையும் பெற்ற மனிதன் இந்த உலகில்யார்? என்று நாரதரி டம் கேட்டு நாரதர் இராமகாதையைச் சுருக் கிக் கூறஅதை விரிவாகக் கூறியதே வான்மீக இராமாயணம் அதில். முழுவதும் இராமன் மனிதனாகவே காட்டப் பெறுகிறான், அவன் நாராயணனது அவதாரமானாலும் அப்பரம்

பொருள் உள்ளீடு செயல் பட்டதாக .அதில் கூறப்பட வில்லை. சில பாத்திரங்கள் இராமனைப் பரம்பொருளாகக் கூறியிருப் பினும் வான்மீகிவாக்காக இராமன் பரம்பொரு ளாக அழைக்கப் பட்டதாகத் தெரியவில்லை. அதன் காரணமாக அவதரித்த பரம்பொருளை மனிதனாகவே வைத்து அவன் மேல் பலர் பல காரணங்களை வைத்துக் குறை கூறலாயின, உண்மையற்ற கதைகளைப் பரம் பொருளுக்கு ஏற்றினர். இதையெல்லாம் கண்ட பரம இராமபக்தரான கம்பர் பரமனை அடிவணங்கி தன் அவதாரத்தின் உண்மை நிகழ்ச்சிகளைத் தனக்குக் காட்டப் பிரார்த்திக்கப் பரமன் காட்டக் கம்பர் தன் காப்பியத்தை 'இராமாவ தாரம்' என்ற பெயரில் எழுதினார் என்று தெரிகிறது. ''இராமனைக் கொணர்க என்று தயரதன் கூறியதை ''திருவின்கேள்வனைக் கொணர்க'' என்பர் கம்பர். இடக்கையில் வில்லேந்தினான் இராமன் என்பதை ''சங்குறை காத்தரு தனிச்சிலை தரித்தான் என்பர் கம்பர். இப்படி ஒருபிரயோகம் வான்மீகத்தில்கிடையா தென்றே கூறுகின்றார்கள். ஆகவே கம்பர் காப்பியத்தில் இராமன் செயலாகவோ அல்லது சீதை செயலாகவோ வரும் இடங்களில் அவை மானிடநிலைமையில் உள்ளனவா அன்றி உள்ளீடான நாராயணன் லஷ்மி இவர் களுடையதா என்பதை ஆழ்ந்து சிந்தித் துணர வேண்டும். எப்படிப் பரம்பொருள் வெளிப் படையாக அன்றி மறைவாகச் செயல்படு கிறதோ அதேபோலக் கம்பரும் அச்செயல்களை வெளிப்படையாகக் காட்டாமல் சில நிகழ்ச்சி கள் குறியீடுகள் மூலமாகத்தான் காட்டுகிறார். இம்முறையை அவர் கவிதையில் பல விடங் களில் காணலாம். 'துறந்துபோமென' என்ற பாடல்மூலம் சீதை அவதாரம் செய்ய முடி வெடுத்தமை அதன் காரணம் இவை குறியீடு களிலிருந்து தெரிகிறோம். அதே போலத்தான் இராமனுக்கு அவன் பரத்வ நிலையில் சீதை யின் துணிகரச் செயல்கள் லஷ்மி தன்னை உணர்வதைக் காட்டும்.

வனம் புகுந்ததிலிருந்து அகத்தியர் கூற்றை வைத்து அவர்கள் பஞ்சவடி சென்று தங்குவது வரை நிகழும் செயல்கள் யாவும் நாராயணன் லஷ்மி இவர்களது மனிதநிலைக்கு ஒத்தே நிகழ் கின்றன. அவற்றில் பரத்துவ நிலையில் அவர் கள் செயல்பட்டதைக் குறிக்கும் செயல் உள்ள தாகத் தெரியவில்லை. அதுவரை அவர்கள் வனவாசம் பதினான்கு வருடங்களில் ஏறக் குறையப் பதிமூன்று வருடங்கள் கழிந்து விட்டன. அதுவரை எந்த அரக்கரோ வந்து முனிவர்களுக்கு இடையூறு செய்ததாகவும் காணவில்லை. பதினான்கு வருட முடிவில் நாம் பரதன் முன் நிற்கவேண்டுமே, வந்த காரியம் நிறைவேற ஒரு நிகழ்ச்சியையும் காணோமே என்ற கவலை சீதா இராமர் இருவருடைய உள்ளீடாக உள்ள பரத்துவ நிலைக்கு ஏற்பட்டிருக்க வேண்டும் என நாம் ஊகிப்பதில் தவறு இல்லையல்லவா?

இந்நிலையில் தான் சூர்ப்பணகை தோன்று கிறாள். இராமனால் முதலில் விரட்டப்படு கிறாள் மறுநாள் காலை சீதையைக் கவர முயல்கிறாள். இளையவனால் அங்கபங்கப் படுத்தப்படுகிறாள். பட்டும் இராமனிடம் மன்றாடுகிறான். துரத்தப்படுகிறாள். சூர்ப்பணகையின் தோற்றமும் முயற்சியும் சீதையின்—லக்ஷ்மியின் உள்ளத்தில் அவதார காரியத்துக்கு விதி அமைக்கும் தொடக்கமாகப் படுகிறது. தவிர அவதார காரியத்துக்கு முதல் நிகழ்ச்சியாகத் தன்னை இராமனிடமிருந்து பிரிப்பதுதான் என்றும் படுகிறது. விதி வகுக்கும் வழியை எதிர்நோக்கியிருக்கிறாள்.

ஒருநாள் அவள் மலர் பறித்துக் கொண் டிருக்கும் வேளையில் பொன்மான் ஒன்று திடீரென அவள் முன் குதித்து விளையாடு கிறது. வியப்புடன் பார்க்கிறாள். அதன் பொன் நிறமும், வெள்ளிப் புள்ளியும் மரகதக் கால்களும் அவள் கண்ணைப் பறிக்கின்றன. அதை எப்படியாவது பிடித்தால் அதனோடு தான் விளையாடலாம் என்று தோன்றுகிறது. ஓடிச் சென்று இராமனை அழைத்து வந்து மானைக் காட்டுகிறாள், பார்த்த ராமன் உள்ளத்தில் என்னென்ன எண்ணங்கள் ஓடினவோ அவன் 'நன்று' என்று ஒரு

வார்த்தை தான் கூறுகிறான். சீதை மானைப் பற்றிப் புகழ்கிறான். அருகில் நின்ற இலக்குவன் 'அண்ணா இது உண்மையான மான் அல்ல. உலகில் இப்படி மான் கிடையாது' என்று கூற இராமன் அப்படிக் கூறாதே லஷ்மணா சிருஷ்டியின் விநோதங்கள்யாவும் நமக்குத் தெரியுமா என்கிறான். இளையவன் அண்ணா நீ என்ன சொன்னாலும் இது ஒரு மாயமான் என்றே நான் கருதுகிறேன். அதுவும் இது மாரீசன் என்ற அரக்கன் என்றே தோன்றுகிறது என்கிறான். இவர்கள் பேச்சு இப்படி நீள்வதைக் கண்ட சீதை மான் ஓடி விடப் போகிறதே சீக்கிரம் போய் அதைப் பிடித்துக் கொடுங்கள் என்று இராமனிடம் பரபரப்போடு கூறுகிறாள். இராமன் சரி என்று புறப்பட ஆரம்பிக்கையில் அண்ணா மன்னிக்கு மான்தானே வேண்டும். நான் சென்று பிடித்து வருகிறேன். அந்த மாயமானை என்கிறான். அதைக்கேட்டுச் சீதை பதறு கிறாள். சூர்ப்பணகை வந்து போனபோது சீதை (லஷ்மி) உள்ளத்தே அவதார காரியத் துக்கு விதி வகுக்கும் வழியை எதிர்பார்த்து இருந்தவள் இந்த மானை முன்னிட்டு இராமனை தன் பக்கலில் நின்றும் அகற்ற அதைப் பிடிக்கவென்று இராமனைப் போகச் சொல்கிறாள். இலக்குவன் கூறியதைக் கேட்டு எங்கே இராமன் தங்கி விடுகிறானோ என்ற பயத்தில் என்ன செய்வது என யோசிக்கிறாள். ஒரு முடிவுக்கு வந்து "அப்போ! நீங்களே போய் மானை எனக்குப் பிடித்துத்தர மாட்டீர்கள் போலிருக்கிறது என்று பொருமலும் விம்மலு மாகக் கூறிக் குளமாகப் பெருகிநின்ற கண்ணீரை விரலால் வழித்துச் சிதறிவிட்டுக் கோபத்துடன் அங்கிருந்து செல்கிறாள். பார்த்த இராமன் இலக்குவனைச் சீதைக்குப் பாதுகாவலாக நிற்கச் சொல்லித் தான் மானின் பின் விரைகிறான். இலக்குவன் விதியை நொந்து கொண்டு தங்குகிறான்.

மான் இராமனை வெகுதூரம் இழுத்துச் சென்று விடுகிறது. அதன் போக்கைக் கண்ட இராமன் இது மாயமான்தான். காரணமின்றி வரவில்லை. இதைக் கொல்ல வேண்டியதுதான் என முடிவு செய்து வில்லில் நாண் பூட்டி அம்பொன்றை எய்கிறான். மாயம் அழிந்து மான் தன் அரக்க வடிவுடனே வீழ்கிறது. விழும் போது இராமன் குரலில் அலறி விழுகிறது. (என்ன கூறி அலறியது என்று கம்பர் கூற வில்லை. ஏன் எனில் அது என்ன கூறி அலறியது என்பது வான்மீகி ராமாயணம் கூறியது அனைவரும் அறிந்ததனால்தான் என்று தோன்றுகிறது) கிட்டிப் போய்ப் பார்த்த இராமன் தம்பியின் அறிவை மெச்சிக் கொள் கிறான். அரக்கன் குரல்கேட்டுச் சீதை பதறுவாளே என நினைத்த இராமன் இக்குரல் இளவல் கேளாதொழிக எனச் சாபமிட்டு தம்பி சீதையைத் தேற்றுவான் சமாதானம் செய்து கொண்டு பர்னசாலையை நோக்கி விரை கிறான். போம்போதே இது சீதையையும் தன்னையும் பிரிக்க முயன்றவர்கள் செய்கையே என்று அவன் மனம் தெளிகிறது.

பர்னசாலையில் அரக்கன் குரலைக் கேட்ட சீதை (லக்ஷ்மி) உள்ளத்திலும் இது தன்னை இராமனிடமிருந்து பிரிக்க விதி வகுத்த வழி தான் என்று உணர்கிறது. ஆனால் இலக்குவன் காதில் அக்குரல் விழவில்லையாதலால் அவன் அசைவின்றி நிற்கிறான். அவனும் சென்றால் தானே பிரிவு நிகழ்ச்சி ஏற்பட முடியும்? ஒரு திட்டம் வகுத்துக் கொள்கிறாள். மானிடச் சீதை வடிவில் செயல்படுகிறாள். படபடப் புடன் அண்ணாவுக்கு ஏதோ பேராபத்து. உதவிக்குச் செல்லுங்கள் என்று இலக்குவனிடம் வேண்டிக் கெஞ்சித் துடிதுடிக்கிறாள். அவன் அசைவதாகக் காணாமையால் சொல்லக் கூடாதவற்றைக் கூறியாவது அவனை அகற்ற நினைக்கிறாள். "நான் கெஞ்சுகிறேன் அண்ணா உயிருக்கு ஆபத்து என்று நான் கூறியும் நீ இன்னும் என்னருகே நிற்பது முறையல்ல. எனக்கு உன் எண்ணத்தில் சந்தேகம் ஏற்படு கிறது. போகப்போகிறாயா இல்லையா என்ற முறையில் அவனை நிந்திக்கிறாள். இலக்குவன் 'வீண் பயம் கொள்கிறீர்கள். அண்ணனுக்கு ஒன்றும் நேரவில்லை. நேரவும் முடியாது என்று

கூறி நிற்கிறான். சீவத அவனை எப்படியாவது அங்கிருந்து அகற்றத் திட்டமிடுபவள் போல் 'நீ இப்போதே போகாவிட்டால் நான் அதோ எரிகிற காட்டுத்தீயில் பாய்ந்து என்னை மாய்த்துக் கொள்கிறேன் என்று அத்தீயை நோக்கி விரைகிறாள். இலக்குவன் பத்றிப்போய் அவன் காலில் விழுந்து 'என்னை வீணாக விரட்டுகிறீர்கள். நான் அண்ணன் கட்டளையும் மீறிச் செல்லச் சொல்கிறீர்கள். போகிறேன்; நீங்கள் தனியே இருக்கிறீர்கள் ஜாக்கிரதை என்று கூறிச் செல்கிறான்.

சீதை (லக்ஷ்மி) 'விதி என்னை அவரிட மிருந்து பிரித்து விட்டது மேல் என்ன நடக்குமோ பார்ப்போம்' என்று எண்ணிய படியே தனியே பர்ணசாலையில் இருக்கிறாள்.

சிறிது நேரத்தில் வாசலில் சலசலப்புக் கேட்கிறது. சென்று பார்க்கிறாள். துளசிமணி தாமரைக்காய் மாலைகள் அணிந்த இருடி ஒருவர் நிற்கிறார். வந்த அதிதியை வரவேற்க வேண்டிய கடமை இல்லக்கிழத்தியதாகும் என்ற முறையில் சீதை அவரை உபசரித்து வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று ஒரு ஆசனத்தில் அமர்விக்கிறாள். அவரை நீர் எங்கிருந்து வருகிறீர்கள் என்று சீதை வினவ இருடி, அம்மா நான் இலங்கையில் இராவண னது விருந்தினனாக இருந்துவிட்டு அங்கிருந்து நேரே இங்கு வருகிறேன் என்று பதில் கூறு கிறார். சீதை உள்ளத்தில் அவதார காரியம் செயல்படத் தொடங்கிவிட்டதென உணர் கிறது. அவள் இருடியை நோக்கி 'ஸ்வாமீ! தங்களைப் போன்ற தபஸ்விகள் இராவணன் போன்ற அரக்கரின் அதிதியாகப் போகலாமா? எனவினவ, இருடி இராவணனை ஆகாயத்தில் உயர்த்திப் பேசுகிறார். சீதை தங்களை இன்னார் என்று அறிவித்துவிட்டு தன் நாயக னால் இராவணன் அழிவுறுவான் என்கிறாள். இருடி மூவுலகையும் அடக்கியாளும் அந்த இலங்கேசனையா கேவலம் ஒரு மனிதனால் அழிக்க முடியுமா? என்று ஏளனமாகக் கேட்கிறான். சீதை அந்த இராவணனை கார்த்தவீரியன் கட்டிப் போட்டதையும் அக் கார்த்தவீரியன் பரசுராமனால் அழி உற்றதையும் சுட்டவே இருடிக்குக் கோபம் தலைக்கேறுகிறது. அதன் காரணமாக வேடம் கலைகிறது. சீதை முன் பத்துத் தலைக ளுடனும் இராவணன் நிற்கிறான். கண்ட சீதை நடுங்குகிறாள். இராவணன் அவளை நோக்கி பயப்படாதே சீதை. நான் உன்னை விரும்பியே வந்தேன். மூவுலகுக்கும் இராணி யாகும் பாக்கியம் உனக்குக் காத்திருக்கிறது. இந்த மனிதர்களால் என்ன உண்டு என் றெல்லாம் இச்சகம் பேசுகிறான். சீதை என் நாயகன் உங்களை அழிக்கவென்றே கானகம் வந்திருக்கிறார். சற்று நேரத்தில் வந்து விடுவார். உன் அழிவு நிச்சயம் என்று துணி வுடன் பதிலிறுக்கிறான். இனி அவளைத் தெருட்டமுடியாதென்பதையும் ஒருவேளை இராமன் வந்துவிட்டால் கஷ்டம் என்பதையும் உணர்ந்த இராவணன் தன் தங்கை தனக்கு வழி காட்டியபடி சீதையை வவ்வத் தீர் மானித்தவன் பிரம்மாவின் சாப.த்தை நினைந்து அவளைக் கைகால்களால் தீண்ட முடியாதென்று அவளைப் பர்ணசாலையுடன் பெயர்த்தெடுத்து புட்பகவிமானத்தில் வைக் கிறான். தேர் தென்திசை நோக்கிப் பறக் கிறது. சீதை கதறுகிறாள்.

வெகுதூரம் சென்றதும் திடீரெனச் சடாயு தோன்றி இராவணனை எதிர்க்கிறான். சிவபெருமான் கொடுத்த வாளால் இராவணன் சடாயுவின் இரு சிறகுகளையும். வெட்டச் சடாயு கீழே சாய்கிறான். ''நல்லவன் தோற்பதே? நரகன் வெல்வதே? இல்லையோ நல்லறம்?'' என்று ஏங்குகிறாள் தன் நாயக னுக்குத் தன்னை யார் கவர்ந்தனர் தன்னை எங்கே கொண்டு செல்கிறான் என்பதையும் புட்பக விமானம் பறக்கு முன் தரையில் சென்ற தேர்ச்சுவடு தென் திசை சென்றதைக் காட்டும் என்றும் கவர்ந்தவன் இராவணன என்பது சடாயு மூலம் அவருக்குத் தெரியும் என்றும் சற்றுத் தேறுகிறாள்.

மேலும் சிறிது நேரம் சென்றதும் கீழே ஒரு வானரக் கூட்டத்தைக் கண்ட சீதை மெல்லத் தன் துகிலில் ஒரு பகுதியைக் கிழித்து அதில் சூடாமணி தவிர்த்த தன் ஆபரணங்களை முடிந்து அக்கூட்ட மத்தியில் விழும்படி எறிகிறாள். ஒரு வேளை இராமன் அவர்களைக் கண்டால் தன் நகைகள் அடையாளம் காட்டும் என்று.

இராவணன் இலங்கை அடைந்ததும் சீதையை அசோகவன மத்தியில் சிறை வைக்கிறான், சிறை ஒரு கட்டிடத்திலன்றி பயங்கர அரக்கிகள் நடுவில் அவளுக்கு உசாத் துணையாகத் தன் தம்பி வீடணனின் மகள் திரிசடையை அனுப்பி வைக்கிறான். குணவதியான திரிசடையின் தோழமை சீதைக்குச் சிறிது ஆறுதல் அளித்து வருகிறது. சிறைவாச வரலாறு இது.

மேலே கண்டபடி சீதையின் செயல்களையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் ஊன்றி நோக்குங்கால் சீதையின் சிறையிருப்பு அவளாக வருவித்துக் கொண்டதா அன்றி யதேச்சையாக நிகழ்ந்ததா என்ற ஐயம்தானே எழுகின்றது. ஆழ ஆய்ந்தால் சீதையின் வாக்கே இந்த ஐயத்துக்குப் பதில் இறுப்பது போலத் தோன்றுகிறது. கம்பர் தன் காப்பியத்தில் சில நிகழ்ச்சிகளைக் குறிப்பிடும். வாசகங்களும், நிகழ்ச்சிகளும் அவள் (லக்ஷ்மி) தேவமாதர் சிறை மீட்க, தான் சிறை புகுந்த செல்வி என்று சொல்லத் தோன்றுகிறது.

"வஞ்சனை மானின்பின் மன்னைப்
போக்கிப்பின்
மஞ்சனை வைது பின்வழிக்கொள்வாய்
என
நஞ்சனையான் அகம் புகுந்த நங்கைநான்
உய்ஞ்சனன் என்னினும் உலகம்
கொள்ளுமோ"

என்ற அவளது தனிமொழியே அவள் சிறைப் 'படவில்லை' சிறை 'புகுந்தாள்' என்பதைக் காட்டும் என்று ஏன் கொள்ளக்கூடாது? "சீதையா", "சரிதம் மகத்" என்ற வாசகம் இவ்வுண்மையைக் கொண்டுதானோ? என்னவோ. சிறையிருந்தவள் 'ஏற்றம்' என்றதும் இதனால்தானோ?

கம்பரது காப்பிய ரசிகர்கள்தான் அடியேனுக்கு விடையளிக்க வேண்டும்.